தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண் : 199.

திருநெல்லைப்

# பரசமய கோளரியார் பிள்ளைத்தமிழ்

[ அங்கப்பநாவலர் இயற்றியது ]



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூல்நிலையம்

1983 ]

[விலை ரூ. ~~5-00~~
14.00

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண்: 199.

திருநெல்லைப்

# பரசமயகோளரியார் பிள்ளைத்தமிழ்

[அங்கப்பநாவலர் இயற்றியது]

பதிப்பாசிரியர் :

**புலவர் வீ. சொக்கலிங்கம்,**

தமிழ்த்துறை,

சரசுவதி மகால் நூல்நிலையம்,

தஞ்சாவூர்.



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூல் நிலையம்,**

தஞ்சாவூர்.

1983 ]

[ விலை ரூ 5—00

முதற் பதிப்பு : 1983.

வெளியீடு :

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம்,
தஞ்சாவூர்.

பதிப்பகம் :

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலைய அச்சகம்.
தஞ்சாவூர்.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| வெளியிடுவோர் உரை | ... | ... | i—ii |
| முன்னுரை | ... | ... | *1—44* |
| பாட்டு முதற்குறிப்பு அகரமுதலி | | ... | *1— 2* |
| பரசமய கோளரியார் பிள்ளைத்தமிழ் | | ... | *1—59* |
| வேண்டுகோள் | ... | ... | *60* |

# வெளியிடுவோர் உரை

கடவுளர்கள், அரசர்கள், குருமார்கள் முதலாயினோரைப் பிள்ளையாகப் பாவித்து, அவர்தம் சிறப்பியல்புகளை, நூறு பாடல்களில் அமைத்துப் பாடுவது, பிள்ளைத் தமிழாகும். அவ்வாறு எழும் நூல்களில், இந்தப் பரசமய கோளரியார் பிள்ளைத் தமிழும் ஒன்று. திருமிகு அங்கப்ப நாவலர் அவர்கள், தனது குருபக்தியை விளக்குவான் வேண்டி, இந்நூலைப்பாடி, தனது நன்றியுணர்வினைப் புலப்படுத்தியுள்ளார்.

பிற சமயங்களுக்குச் சிங்கம் போல்வார் தமிழகத்தில் சிலருண்டு. அவர்களில் ஒருவராகச் சிறப்புப்பட்டத்தோடு விளங்கியதனால், இவரது இயற்பெயரினை அறுதியிட்டுக் கூற இயலவில்லை. சைவசமயத்தினை வலியுறுத்தி, சில பல சிறந்த கொள்கைகளையும், தத்துவக் கருத்துக்களையும் வற்புறுத்திக்கூறும் இவரது கூற்றிலிருந்தே, இவரது குரு, இன்னும் அதிகமான சைவச் செம்மலாக, பிற சமயங்களுக்குச் சிங்கம் போன்று விளங்கியுள்ளார் என்பது புலனாகிறது.

நல்ல சந்தங்களோடமைந்த இந்நூலை, ஆாவத்தோடும், சிறப்போடும், விரிவான முன்னுரையோடும், பதிப்பித்துதவிய எமது சரசுவதிமகால் நூல்நிலையத் தமிழ்த்துறைப் புலவர் திரு. வீ. சொக்கலிங்கம் அவர்கட்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்நூல் வெளிவரப் பொருளுதவிசெய்த நடுவண் அரசுக்கும், நன்முறையில் வெளிவரச் செயலாற்றிய இந்நூலக நிருவாக அதிகாரி பொறுப்பும், நூலகருமாகிய திருவாளர் அ. பஞ்சநாதன், எம். ஏ., பி. லிப். எஸ்சி., அவர்கட்கும், நூலக அச்சகத்தாருக்கும், ஏனையோருக்கும்

எனது நன்றி உரித்தாகுக. இச்சுவடியை அன்பளிப்பாகக் கொடுத்துதவிய திருவாளர் தஞ்சை டாக்டர் டி. ஏ. துரைராஜ் அவர்கட்கும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

இதுபோன்ற சுவடிகளைத் தம்மிடம் பெற்றுள்ள வர்கள், அவற்றை எம்மிடம் அன்பளித்துதவினால் இதுபோன்று நூல்வடிவில் வெளியிட்டு, மக்கள் பயனடை யச் செய்து, அதன்மூலம் சிறப்படைவார்கள். எனவே தம்மிடம் உள்ள சுவடிகளை எம்மிடம் கொடுத்துத வேண்டுகின்றேன்.

குருபக்தியைச் சிறப்பிக்கும் இந்நூலைப் பெற்றுப் பயனடைவோர், தாங்களும், குருபக்தியில் சிறந்து விளங்கு வார்கள் என நம்புகிறேன். தமிழன்னை அருள்புரிவாளாக.

இங்ஙனம்,

தஞ்சாவூர்,
*11—12—83.*

**இரா. சத்பதி,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

உ

தமிழ் வாழ்க

# முன்னுரை

அக்குலா அரையினர் திரைகுலா
முடியினர் அடிகள் நன்று
தக்கனார் வேள்வியைச் சாடிய
சதுரனார் கதிர்கொள் செம்மை
புக்கதோர் புரிவினர் வரிதரு
வண்டுபண் முரலுஞ் சோலைத்
திக்கெலாம் புகழுறும் திருநெல்வே
லியுறை செல்வர் தாமே!

என்று வேதநெறி தழைத்தோங்கவும், மிகுசைவத்துறை விளங்கவும், சீர்காழிப்பதியில் அவதரித்தருளிய சைவ சமயாசாரியர், திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள், சைவ உலகை வாழ்விக்க வந்த, நமது தெய்வங்களாம் மங்கையர்க்கரசியாரும், நின்றசீர் நெடுமாற நாயனாரும், குலச்சிறை நாயனாரும், வேண்டிக் கொண்டதற்கிணங்கியருளி, மதுரையம் பதியினின்றும் தென்பாண்டி நாட்டிற்குத் திருத்தலப் பயணம் மேற்கொண்டபோது, திருநெல்வேலியை அடைந்து அருள்மிகு காந்திமதியம்மை உடனுறை நெல்லையப்பரைக் கண்ணாரக்கண்டு களித்து, மனமுருகிப் பாடிய பாடலாகுமிது. தண்பொருநைத் தாமிரவருணிசூழ் திருநெல்வேலி, மருதமரங்கள் நிறைந்து காணப்படுகின்ற சிறப்பியியல்பினை யுடையது. செழுமை மிக்க இந்நெல்லையம்பதியில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள நெல்லையப்பரைப் பற்றிய பாடல் ஒன்று இரட்டையரால் பாடப்பட்டது. அது:

வேயீன்ற முத்தர்தமை வெட்டினனே யிடையன்
தாயீன்ற மேனி தயங்கவே—பேயாகேள்

எத்தனை நா ளென்றே யிடருவான் பாற்குடத்தை
அத்தனையும் வேண்டும் அவர்க்கு.

என்பது. இது தல வரலாற்றுச் சுருக்கம்.

ஒரு காலத்தில், பாற்குடத்தைத் தலையில் சுமந்து கொண்டு வந்து, ஊருக்குள் விற்க வந்த இடையன், வழியில் மூங்கில்கள் நிறைந்த ஒரு இடத்தில் இடறி விழுந்தான். பாற்குடம் உடைந்து பாலும் தரையில் ஊற்றப்பட்டு வீணாகியது. அதே இடத்தில் பல நாட்கள் இடறி விழுந்து பாலைக் கொட்டினான். ஒருநாள் மண்வெட்டியோடு வந்து அவ்விடத்தை வெட்டினான். அதனுள் ஒரு சிவலிங்கம் இருக்கக் கண்டான். மண்வெட்டித்தழும்பு அந்த இலிங்கத்தின் மேலும் பட்டது. பிறகு அதனைக் கோயிலாக்கி வழிபட்டனர். வேய்—என்றால் மூங்கில். மூங்கிலடியில் இருந்ததால் வேயீன்ற முத்தர் எனப்பெயர் பெற்றார்.

இவ்விறைவனை, முதியாளொருத்தி, முறுக்கு சுட்டு விற்று வருபவள், நாளும் உள்ளன்போடு வழிபட்டு வந்தாள். விற்பனைக்குரிய முறுக்குகளையும் சிவனுக்கே உரித்தாக்கி விற்பாள். ஒருநாள் தன் வீட்டுப் புழக்கடையில், மறுநாள் முறுக்குக்குரிய நெல்லைக் காயவைத்து விட்டு, முறுக்கு விற்கச் சென்றுவிட்டாள். யாருமற்ற அவள் முறுக்கு விற்றுக் கொண்டிருக்கும்போது, பெருமழை வந்தது. உடன், மூதாட்டி, வேயீன்ற முத்தரை வேண்டினாள். "காக்கக் கடவிய நீ காவா திருப்பையோ?" என வேண்டினாள்.

மழை நின்றதும், வீட்டிற்கு விரைந்து வந்து கண்டாள். என்னே! வியப்பு!! அவள் காயவைத்த நெல்லைச்சுற்றிலும் மழை பெய்திருந்தது. நெல்மீது ஒரு துளிகூட மழை பெய்யவில்லை. நெல் நன்கு காய்ந்திருந்தது. முதியாள், ஆனந்தக் கண்ணீர் மல்கி, "நெல்லுக்கு வேலியாய் நின்று காத்த அப்பனே! நெல்வேலி அப்பா! நெல்லையப்பா! காத்தாய்! உன் கருணையே கருணை" என்று துதித்தாள்.

மூதாட்டியின் தலையன்பில் கட்டுண்டு, நெல்லைக்காத்ததால் நெல்வேலியப்பராயினர். ஊருக்கும் ‘நெல்வேலி’ என்ற பெயர் உண்டாயிற்று. ‘திரு’ என்ற அடைமொழி சேர்ந்து ‘திருநெல்வேலி’ ஆயிற்று என்பர்.

‘வேதசருமா’ என்பான் ஒரு அந்தணன். அவன் உலர்த்தி வைத்திருந்த நெல்லை, வெள்ளம் அடித்துப் போகாமல் வேலியிட்டுக் காத்ததால் சிவபெருமானுக்கு இப்பெயர் வந்ததாகப் புராணம் கூறும்.

முன் வரலாறுபடி, சுவாமிக்கு தேன்குழல் முறுக்கு நிவேதனம் உண்டு. எனவே முன் வரலாறு சான்றளிக்கிறது. அம்மைபெயர் ‘காந்திமதித்தாய்’. திருஞான சம்பந்தரால் பாடல் பெற்ற தலம்.

இத் திருநெல்வேலி வேய்முத்தர் மீது, மொழிக்கு முதல் வரும் எழுத்துக்களை முதலெழுத்தாகக் கொண்டு, துறைப் பொருளமைய, பாண்டியநாட்டு வேர்பத்தூரில் வேதியர் குலத்தில் பிறந்த அம்பிகாபதி என்பார் ஒரு ‘வருக்கக் கோவை’ பாடியுள்ளார். இதற்கு, ‘நெல்லைமாலை’ எனவும், நெல்லைச் சொல்வருக்கக்கோவை என்ற மற்ற பெயர்களும் உண்டு. நல்ல பொருளமைதியும் கருத்தாழமும் உடைய நூல்.

“ தேரோடும் வீதியெல்லாஞ் செங்கல்லுஞ் சங்கினமும்
நீரோடு லாவிவரு நெல்லையே—காரோடு
கந்தரத்த ரந்தரத்தர் கந்தரத்த ரந்தரத்தர்
கந்தரத்த ரந்தரத்தர் காப்பு ”

என்ற காப்புச் செய்யுளையும்,

“ கண்ணூறு சாத்து மரியயன் போற்றுங் கழைமுத்தர்க்குப்
பண்ணூறுஞ் சொல்வருக் கக்கோவை தன்னைப்
பரிவுடனே

வெண்ணீ றணியம்பி காபதி வீரையில் வேதியன்சொல்
தொண்ணூறு மெட்டும் படிப்பார் தமக்கில்லை
துன்பங்களே ”

என்ற ஈற்றுச் செய்யுளையும் கொண்டது.

இவ்வாறுன மற்றும் பல சிறப்பியல்புகளையெல்லாம் கொண்டது திருநெல்வேலி. இதனை 'நெல்லை' எனக் குறிப்பிடுவர்.

'பரசமய கோளரியார்' என்பது திருஞானசம்பந்தரைக் குறிக்கும் சமணர்களைப் புறங்கண்டு, சைவத்தை நிலைநாட்டிப் பிறசமயங்கட்குச் சிங்கம்போல் விளங்கியதனால் இவருக்கு இப்பெயருண்டாயிற்று. பிற அரசர்களைப் புறங்கண்டு வெற்றிவாகை சூடிய திருமங்கையாழ்வாருக்குப் 'பரகாலர்' என்ற பெயருண்டு.

இப் பிள்ளைத்தமிழ் நூலில் பாட்டுடைத் தலைவனாக உள்ள 'பரசமய கோளரியார்' என்பார், நெல்லை மாவட்டத்தில் புகழுடன் வாழ்ந்ததாகத் தெரிய வருகின்றது. இயற்பெயர் என்ன என்பது அறியக்கூடவில்லை. நூலை ஆராயும்போது, பாட்டுடைத் தலைவரின் பெயர்கள்: அணுவுமேருமானவன்(21), இரத்தினமகுடத்தியாகி(39), கள்வன்(52), குடவிளைக் குமுறிய நெல்லையாதிபதி(37), குமரர்க்கமரர்க்கதிபன் (38), குருதேசிகன் (24), குருராயதீபன்(1), குருலிங்க சங்கயப் பரசமய சிங்கம்(40), சண்டனூரத்தைத் தண்டியுதைத்தவன்(23), சமரநாயகன்(57), சற்குரு(36), சிங்கப்பெருமாள்(55, 59), சிவகோளரி(24), சிவசித்தமன்னன்(4), சிவசிவப்பிரகாசன்(85), சிவஞானநம்பன்(15), சிவஞானன்(100), சிவன்மாலோடயனெனவடிவமானவன்(20), சிற்பரசிவரூபன்(90), செங்கண்மாதவன்(15), செயவல்லிபுணர்துங்கன்(17), சைதன்யபிரமம் (100), சைவக்குழாந்தழையவருள் சொரியுமேகம் (34), தற்பரக்குரு(36), திருநெல்லை அகளங்கன்(17), திருமால்(55), திவாகரன்(22), தினகரன்(63), நித்திய

கல்யாணன்(65), நெல்லைக்கதிபன்(26), நெல்லைநகர்வளர் அல்லி, வல்லியணிபுயன்(53), நெல்லைப்பதிவேந்து(79) நெல்லையாதிபதி(13), நெல்லைவளங்காக்கும் தலைவன்(54), பரசமய கோளரிராயர்(13), பரசமயக்களிறு(52), பரசமய சிங்கன்(54), பரசமய முகுந்தர்(45), பரசமயமுக்கடவுள் (48), போதகுரு(6), மாணிக்கம்(58), மாவிஷ்ணு(58), மானகேசரி(56), வரதன்(60), வாகண்டதீபன்(73), விசுவகுலக்குன்று(55), விசுவகுலப்புனிதர்(43), விசுவ சற்குலதீபன்(84), விசுவதீபன்(65), விசுவநாதன்(2), விசுவமுருக்கொண்டான்(59), விசுவப்(91), யோகசிங்கா தனன்(89) ஆகியவைகளால் குறிக்கப்படுகின்றன.

இவர் விசுவ குலத்தினர் என்பது தெரிகின்றது. இரத்தின மகுடத் தியாகி, பணியாச்சிரமுருட்டியன், நெல்லைக்கதிபன், நெல்லையாதிபதி முதலானவற்றால், இவர் அரசராக இருக்கலாமோ என்பது ஐயம். குரு, லிங்க, சங்கமச் செயல்கள் அடிக்கடி பேசப்படுவதால், இவர் வீர சைவர் எனத் தோன்றுகிறது. செயவல்லிபுணர்துங்கன், அல்லிவல்லியணிபுயன் முதலானவற்றால் இவர் திருமண மானவராக இருக்கலாமோ என்பது ஐயம்.

பாஷண்டியை வாய்கிழிக்கும் சிங்கப்பெருமாள் என்று 32ம்பாட்டில் கூறப்பட்டுளதால், இவர் 'பரசமய கோளரி' என்ற விருதைப்பெற்றவர் என்பது புலனாகின்றது. 'குரு' என்ற சொல்லுக்குப் பொருள், இலிங்க வேடத்தொடு மணித்தாழ்வடஞ் சமயநூல் வாங்காத குருவுமுளரோ' என்று 36ம் பாட்டில் கூறப்பட்டுளது.

குருலிங்க சங்கமத்தால், பிறசமயங்களைச் சாடியவர் என்பது, 'குருலிங்க சங்கமப் பரசமய சிங்கமே' என்பதனால் பெறப்படும். இவரது தோற்றப்பொலிவு சிவவேடமாகும். (செய்யுள் 41) திசைவாழரசர்களை 84ம் பாட்டில் நூலாசிரியர் கூறுகின்றார். அவர்களெல்லாம் இவரைக் குருவாக ஏற்றுக்கொண்டனர் என்று கூறுகின்றார்.

'நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பம் சாற்றியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லு
மந்திரமேதடா'

என்ற சிவவாக்கியரின் கொள்கையினை. 'பூசை செய்தால் ஞானம் வராது' என்று 88ம் பாட்டில் கூறுகின்றார். பீஜாட்சரங்களைப் பற்றியசெய்திகள் 89-ம் செய்யுளில் காணப்படுகின்றன. 90ம் பாட்டில் மிருகங்களைக் கூறுகின்றார். குருவாகிய பரசமய கோளரியை, ஒரு முகத்தோடு தோன்றிய ஐம்முகச்சிவன் என்று குருபக்தி மேலிட்டால் ஆசிரியர் கூறுகின்றார். இது 91ம் பாட்டு 92ம் பாட்டில் கேசாதிபாத வருணனையில் குருவினை இடைவரை குறிப்பிடுகின்றார். குரு உருட்டி வரும் தேர் அமைத்த பாங்கினை மிகச் சிறப்பாக 93ம் செய்யுளில் கூறுகின்றார்.

94ம் பாட்டில் "சுப்ரதீபம் வெருவ" என்று காணப்படுவதால், சிலசெய்திகள் உய்த்துணரக் கிடக்கின்றன. இவர், சுப்ரதீபக் கவிராயரைக் குறிப்பிடுகிறார் எனக்கொண்டால், சுப்ரதீபக்கவிராயரும் பரசமயகோளரியாரும் சமகாலத்தவர் எனப்பெறப்படுகின்றது. ஆயின் இருவரும் 18ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனக்கொள்ள இடமிருக்கிறது. சுப்பிரதீபக்கவிராயர் தச்ச சாதியினர் என்று தமிழ்ப்புலவர் அகராதி கூறுவதனால், பாட்டுடைத் தலைவரும் விசுவ குலத்தினர் என்று பேசப்படுவதனால் இருவரும் உறவின் முறையினராக இருக்கலாமோ என்பதும் ஆராயற்பாலது. சுப்ரதீபக்கவிராயர் 'அட்டாவதானி'. அவரை வெருவச்செய்தவர் என்பதனால் பாட்டுடைத் தலைவரும் (சு+ப்ர+தீபம்) மேலான, பரந்த, விளக்கமாக ஒளிர்ந்தவர் என்று விளங்குகின்றது. 'வீரைப்பரசமய கோளரியார்' என்னும் பெரியார் திருப்பாதிரிப்புலியூரின் சிறப்பினைக் கூறுவனவாக, கன்னிவனபுராணம், புலியூர் நாடகம், அஷ்டாதசபுராணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். இந்நூல்கள் ஒன்றும் கிடைக்கவில்லை. 'பரசமயகோளரி' என்ற சிறப்புப் பெயரோடு 12ம் நூற்றாண்டில் முதற்குலோத்துங்க சோழ மன்னனின் ஆட்சிக்கால இறுதியில் விளங்கியவர். இவர், வீரை

என்னும் ஊரைச் சார்ந்தவராகக் கருதப்படுகிறார். தென்னாற்காடு மாவட்டம், திருப்பாதிரிப்புலியூர், பாடலீசுவரர் கோயிலில் காணப்படும் 2 சாசனப் பாடல்களால் இவரைப் பற்றி சிறிது அறியமுடிகிறது. இவர் கி. பி. 1070—1119ல் வாழ்ந்தவர் என அறியமுடிகிறது.

நம், பாட்டுடைத்தலைவன், 'திருநெல்லைப் பரசமய கோளரியார்' என்று கூறப்படுவதால், இவர், அவரினும் வேறானவர் என்பது பெறப்படுகிறது. இதில் திருப்பாதிரிப் புலியூர் குறிப்புகள் ஏதும் வரவில்லை

திருநெல்வேலியிலுள்ள மகமாயி இங்கு பேசப்படுகின்றாள் 97-வது செய்யுளில். உலகத்தின் இயற்கையினை 99வது செய்யுளில் அழகாகக் குறிக்கின்றார். பதி பசு பாசத்தினியல்பு 100வது பாட்டில் கூறுகின்றார்.

நெல்லை மாவட்டத்திலுள்ள சக்தி தெய்வமான அன்னை புட்டாபூரத்தியம்மன், இந்நூல் காப்புப் பகுதியில் பேசப்படுவது சிறப்பு. ஆரம்பத்தில் ஒரு சக்தி புட்டாபூர்த்தியையும் இறுதியில் ஒருசக்தி (மகமாயி)யையும் கூறி, இறைசக்தியையும் நிலைநாட்டுகின்றார். அத்துடன் 19ம் பாட்டில் ஆறாதார தத்துவத்தையும், 40ல் ஆறாதாரத் தெய்வங்களையும், 42ல் பஞ்சபூதங்களையும் குறிப்பிடுகின்றார்.

பிள்ளைத்தமிழ் நூலில் பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் பத்துப்பருவத்திற்கும் 100 பாடல்கள் அமைவது மரபு. இந்நூலில் காப்புப்பருவத்தில் 9 செய்யுட்களும் முத்தத்தில் 9ம், சிறுபறையில் 8ம், வருகையில் 11ம் உள்ளன. காப்புப் பருவத்திற்கு முன்னுள்ள மூன்று பாடல்களையும் சேர்த்து 100 செய்யுட்கள் இதில் இடம் பெற்றுள்ளன.

காப்பில் 3வது செய்யுளில் பிள்ளைத்தமிழ் இலக்கணம் கூறப்பட்டுளது. 'பிள்ளைத்தமிழ்' என்பது, ஆசுகவி, மதுர கவி, சித்திரகவி, வித்தாரகவி ஆகிய நான்கில், வித்தார

கவியின் முதலாவதாகும். இது, தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும். இதற்குப் பிள்ளைக்கவி எனவும் பிள்ளைப்பாட்டு எனவும் வேறு பெயர்கள் உண்டு. இது, தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே இருந்துவந்ததென்பதனை, " குழவி மருங்கிலும் கிழவ தாகும் " என்பதாலறியலாம்.

இதற்கு, உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரும், "குழவிப் பருவத்தும் காமப்பகுதி உறுதியாகும்" என உரைகண்டார்.

" சாற்றரிய காப்புத்தால் செங்கீரை சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை—போற்றரிய
அம்புலியே ஆய்ந்த சிறுபறையே சிற்றிலே
பம்புசிறு தேரொடும் பத்து "

என்பது, குணவீரபண்டிதர் இயற்றிய 'வச்சணந்தி மாலை' எனும் 'வெண்பாப் பாட்டியல்'. ஆனால், பன்னிரு பாட்டியலில்,

" காப்பொடு செங்கீரைத் தால்சப் பாணி
யாப்புறு முத்தம் வருகவென் றல்முதல்
அம்புலி சிற்றில் சிறுபறை சிறுதேர் "

என்று கூறப்பட்டுள்ளது. இவற்றில், தாலமும் சிறுபறையும், பருவம் மாறுபட்டுள்ளன. ஆயினும்,

" தாறுகொலை நீக்கித் தெய்வக்காப் பாய்ச்சுற்றம்
தொகையளவு வகுப்பகல் விருத்தம் தன்னால்
முறைகாப்புச் செங்கீரைத் தால்சப் பாணி
முத்தம்வா ரானையம் புலியி னோடு
சிறுபறைசிற் றில்சிறுதேர் இவைபின் மூன்றும்
தெரிவையர்க் குப்பெருங்கழங் கம்மானை யூசல்
பெறுமூன்று முதலிருபத் தொன்று ளொற்றைப்
பெறுதிங்கள் தனில்பிள்ளைக் கவியைக்
கொள்ளே! "

என்று, பரஞ்சோதி முனிவர், தாம் இயற்றிய சிதம்பரப் பாட்டியலில் தெளிவுபடக் கூறியிருக்கின்றார்.

பிள்ளைத்தமிழ், ஆசிரியச் சந்தவிருத்தத்தாற் பாடப் பெறும். ஆண்பாற் பிள்ளைத்தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் எனப் பத்துப் பருவங்களையுடையது. பெண்பாற் பிள்ளைத்தமிழ் காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வாரானை, அம்புலி, கழங்கு, அம்மானை, ஊசல் எனப் பத்துப் பருவங்களையுடையது.

பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரிய கடைசி மூன்று பருவங்களில், நீராடற் பருவமும், மன்மத நோன்புப் பருவமும் இடம் பெறும். சிற்றிலிழைத்தல், சிறுசோறுக்கல், குழமகன், ஊசல், காமவேள் நோன்பு போன்றவை, பெண்பாற் பிள்ளைத்தமிழுக்குரியன என்று 'பன்னிரு பாட்டியல்' கூறுகின்றது. இம்மட்டோடமையாமல், பெண்பாற் பிள்ளைத்தமிழில் வைத்துப் பாடுதற்குரியனவாக, குழமணம், நோன்பு, நீராடல், பாவையாடல், அம்மானை, கழங்கு, பந்தடித்தல், சிறுசோறடுதல், சிற்றிலிழைத்தல், ஊசலாடல் ஆகியவைகளையும் பிங்கலந்தை கூறுகின்றது. இவைகளில், பொதுவாக எல்லா பெண்பாற்பிள்ளைத்தமிழ் நூல்களிலும் அம்மானை, நீராடல், ஊசலே பாடப்பெறும். சிவயோக நாயகி பிள்ளைத்தமிழில் நீராடுதலுக்குப்பதில் கழங்காடுதல் கூறப்பட்டுளது. 'மன்மத நோன்புப் பருவம்' ஆண்டாள் பிள்ளைத்தமிழில் காணக்கிடைக்கின்றது.

இனிப் பிள்ளைத்தமிழ், குழந்தையின் 3, 5, 7, 9, 11, 13 15, 17, 19, 21 ஆகிய மாதங்களில் பாடப்பெறும். ஆண்பாற் பிள்ளைத்தமிழே பழமையானதாகிலும், பண்டை இலக்கியங்களில், பெண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய அம்மானை, ஊசல் முதலான பருவங்கள் விரவி வருகின்றன.

சான்றாகச் சிலப்பதிகாரத்து, அம்மானைவரி, ஊசற்பாட்டு; வான்கலந்த மாணிக்கவாசகரின் தேன்கலந்த திருவாசகத்துத் திருவம்மானை, திருப்பொன்னூசல்; நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் திருஞானசம்பந்தரின் திருக்கழுமலத் திருக்கடைக்காப்பு முதலானவற்றால் அறியலாம். ஆண்பாற் பிள்ளைத்தமிழின் பருவங்கள் சிலவற்றையும் பண்டை இலக்கியங்களிற் காணலாம். பட்டினப்பாலையில் சிறுதேர்ப் பருவத்தினையும், கலித்தொகையின் குறிஞ்சிக்கலியில் சிற்றில் சிதைத்தலையும் காணலாம். பொதுவாக அதிராவடிகள் இயற்றியருளிய, ஒன்பதாந் திருமுறையில் இடம் பெற்றுள்ள 'மூத்தபிள்ளையார் மும்மணிக்கோவை' யில், செங்கீரைப் பருவத்தினையும், சப்பாணிப் பருவத்தினையும் காணலாம். பெரியாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய 'திருமொழி'யில், செங்கீரைப்பருவம், தாலப்பருவம், சப்பாணிப் பருவம், முத்தப்பருவம், வாரானைப்பருவம், அம்புலிப்பருவம், சிற்றில்பருவம் ஆகிய பருவங்களைக் காணலாம். மேற்கூறியவைகள், பிள்ளைத்தமிழ் என்ற பெயரால் இல்லையெனினும், பிள்ளைத்தமிழ்ப் பருவங்களைக் கொண்டவைகள்.

"பிள்ளைத்தமிழ்" என்ற பெயரால் எழுந்த நூல்கள் எண்ணிறந்தன. அவைகள் எல்லாவற்றையும் நாம் அறிய இயலவில்லை. பலநாட்களாக முயன்று தேடித்தொகுத்து, அகவரிசைப்படுத்திய பட்டியல் ஒன்று அடுத்துதந்துள்ளேன். அவைகளில், சிலவற்றிற்கு ஆசிரியர் பெயர் தெரியவில்லை. அவைகளில், திருத்தவேண்டியவை இருப்பின் தமிழுலகம் மன்னித்தருள வேண்டுகிறேன். அத்துடன் அதன் உண்மையினையும், வேறுபல பிள்ளைத்தமிழ் நூல்கள், அவற்றின் ஆசிரியர்கள் ஆகியவற்றின் பெயர்களையும் அனுப்பித்தர வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அவ் வகரவரிசைப் பட்டியல் வருமாறு:—

# இதுவரை தெரியவந்துள்ள பிள்ளைத்தமிழ் நூல்களின் அகரவரிசைப் பட்டியல்

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| | **அ** | |
| 1. | அகிலாண்டநாயகி (திருவானைக்கா) பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை |
| 2. | அங்கயற்கண்ணம்மை (பள்ளத்தூர்) பிள்ளைத்தமிழ் | அ. நரசிம்மபாரதி |
| 3. | அண்ணா பிள்ளைத்தமிழ் | கவிஞர் பொன். வேங்கடேசன் |
| 4. | அண்ணா பிள்ளைத்தமிழ் | டாக்டர் பு. மு. சாந்தமூர்த்தி |
| 5. | அண்ணா பிள்ளைத்தமிழ் | புலவர், கவிஞர். பொன்மாரி |
| 6. | அண்ணா (பேரறிஞர்) பிள்ளைத்தமிழ் | பாவலர். குமாச |
| 7. | அபயாம்பிகை பிள்ளைத்தமிழ் | ? |
| 8. | அபிராமியம்மை பிள்ளைத்தமிழ் | ? |
| 9. | அப்பர் பிள்ளைத்தமிழ் | காரைக்குடி சொக்கலிங்கஞ்செட்டியார் |
| 10. | அப்பர் பிள்ளைத்தமிழ் | மு. கோ. இராமன் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 11. | அமுதாம்பிகை (குளத்தூர்) பிள்ளைத்தமிழ் | சிவஞானமுனிவர் |
| 12. | அம்மை பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை |
| 13. | அரியக்குடி அலர்மேல்மங்கை பிள்ளைத்தமிழ் | வேலாமூர் கிருஷ்ணமாச்சாரியார் |
| 14. | அருணகிரிநாதர் பிள்ளைத்தமிழ் | அருட்கவி. தேவி. கருமாரிதாசர் |
| 15. | அருணாசல ஞானதேசிகர் பிள்ளைத்தமிழ் | சுப்பராய அடிகள் |
| 16. | அருணை வடிவேலர் பிள்ளைத்தமிழ் | மு. அண்ணாமலை |
| 17. | அரும்பரத்தை வேதவிநாயகர் பிள்ளைத்தமிழ் | ? |
| 18. | அவிநாசிக் கருணாம்பிகை பிள்ளைத்தமிழ் | கருணைதாசர் என்னும் கரும்புலவர் |
| 19. | அவிநாசிக் கருணாம்பிகை பிள்ளைத்தமிழ் | சி. கே. சுப்பிரமணியமுதலியார் |
| 20. | அவிநாசிக் கருணாம்பிகை பிள்ளைத்தமிழ் | செட்டிபாளையம் வாசுதேவ முதலியார் |
| 21. | அழகர் பிள்ளைத்தமிழ் | கவிகுஞ்சர பாரதியார் |
| 22. | அழகர் பிள்ளைத்தமிழ் | சாமி. கவிகாளருத்திரர் |
| 23. | அழகர் பிள்ளைத்தமிழ் | நாராயணய்யங்கார் |
| 24. | அழகர் பிள்ளைத்தமிழ் | மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் |
| 25. | அழகர் பிள்ளைத்தமிழ் | வேப்பத்தூர் சங்கத்தார் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 26. | அழகாபுரி உமையம்மை பிள்ளைத்தமிழ் (சாக்கை) | தியாகராசச் செட்டியார் |
| 27. | அழகாபுரி உமையம்மை ஆனந்தப் பிள்ளைத்தமிழ் | சிவசுப்பிரமணிய தேசிகர் |
| 28. | அழகிய மாமுலையம்மை பிள்ளைத்தமிழ் (திருவீழிமிழலை) | காழிஞானதேசிகர் |
| 29. | அழகுக்கண்ணியம்மை பிள்ளைத்தமிழ் | ? |
| 30. | அளகை உமையம்மை பிள்ளைத்தமிழ் | கண்டனூர். புதுவயல், அ. சண்முகஞ்செட்டியார் |
| 31. | அறம் வளர்த்த நாயகி பிள்ளைத்தமிழ் | தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் |
| 32. | அனுமார் பிள்ளைத்தமிழ் | அருணாசலக் கவிராயர், சீர்காழி. |
| 33. | அனுமார் பிள்ளைத்தமிழ் | இராமதாசர் |

## ஆ

| | | |
|---|---|---|
| 34. | ஆண்டவர் பிள்ளைத்தமிழ் | சவ்வாதுப் புலவர் |
| 35. | ஆண்டாள் பிள்ளைத்தமிழ் | சவ்வாதுப் புலவர் |
| 36. | ஆண்டாள் பிள்ளைத்தமிழ் (ஸ்ரீ) | ? (கோவை. நா. வரதராஜுலுநாயுடு பதிப்பு) |
| 37. | ஆண்டாள் பிள்ளைத்தமிழ் | ? (வேணுகோபால்நாயுடு பதிப்பு) |

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| 38. ஆண்டியப்பப் பிள்ளை பிள்ளைத்தமிழ் | முகலூர் மீனுட்சிசுந்தரக் கவிராயர் |
| 39. ஆதிசங்கரர் பிள்ளைத்தமிழ் | அருட்கவி தேவி கருமாரிதாசர் |
| 40. ஆதிபுரி வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ் | கனகசபைத் தம்பிரான் |
| 41. ஆதிவராகப்பெருமாள் பிள்ளைத்தமிழ் | ? |
| 42. ஆயலூர் முருகன் பிள்ளைத்தமிழ் | தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் |
| 43. ஆயிஷா நாச்சியார் பிள்ளைத்தமிழ் | கலைமாமணி ஷெரீப் மு. கவிகா |
| 44. ஆய்க்குடி முருகர் பிள்ளைத்தமிழ் | சிவராமலிங்கம் பிள்ளை என்னும் குலசேகரபுரம் முருகேசக் கவிராயர் |
| 45. ஆலாம்பாளையம் சுந்தர கணேசர் பிள்ளைத்தமிழ் | கவிஞர் அடிகள் கு. ஆ. அரங்கனுதனுர் |
| 46. ஆழ்வார் பிள்ளைத்தமிழ் | ? |
| 47. ஆழ்வார்கள் பிள்ளைத்தமிழ் | இலட்சுமணதாசர் |
| 48. ஆறுமுகநயினுர் பிள்ளைத்தமிழ் | ச. சண்முகதாச பிள்ளை |
| 49. ஆறுமுகம்பிள்ளை பிள்ளைத்தமிழ் | ஞானசேகரம் பிள்ளை |
| 50. ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் | புலவர் அரிமதிதென்கையர் |
| 51. ஆனைமலையாழ்வார் பிள்ளைத்தமிழ் | ? |
| **இ** | |
| 52. இராகவர் பிள்ளைத்தமிழ் | குற்ருலக் குழந்தை முதலியார் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 53. | இராசராசசோழதேவர் பிள்ளைத்தமிழ் | ? |
| 54. | இராமலிங்க அடிகள் பிள்ளைத்தமிழ் (வடலூர்) | பொ. சுந்தரம் பிள்ளை |
| 55. | இராமலிங்க சுவாமிகள் பிள்ளைத்தமிழ் | வள்ளலார் தாசன் |
| 56. | இராமானந்தர் பிள்ளைத்தமிழ் | சிரவை. கந்தசாமி அடிகள் |
| 57. | இருடியர்பட்டிக் குருநாதர் பிள்ளைத்தமிழ் | சற்குருதாசன் |
| 58. | இலஞ்சி வேலவன் பிள்ளைத்தமிழ் | கவிராச பண்டாரம் |
| 59. | இளமுலையம்மை பிள்ளைத்தமிழ் | மலையாளநாட்டு திருமலையூர் பானுகவியடிகள் |
| | **ஈ** | |
| 60. | ஈரோடை வாரிணங்குமுலையம்மையார் பிள்ளைத்தமிழ் | கவிஞரடிகள் கு. ஆ. அரங்கநாதனுர் |
| 61. | ஈழத்தந்தை செல்வா பிள்ளைத்தமிழ் | பாவலர் சுமாச |
| | **உ** | |
| 62. | உத்தரகோசமங்கை மங்களநாயகி பிள்ளைத்தமிழ் | ? |
| 63. | உமர் ஒலியுல்லா பிள்ளைத்தமிழ் | ஈழம் வித்வத்தீபம் அப்துல்காதர் புலவர் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 64. | உமாபரமேசுவரியார் பிள்ளைத்தமிழ் | ? |
| 65. | உமையம்பிகை பிள்ளைத்தமிழ் | தியாகராஜ செட்டியார் |
| 66. | உறையூர் நாச்சியார் பிள்ளைத்தமிழ் | திரிசிரபுரம் கோவிந்தபிள்ளை |
| | **எ** | |
| 67. | எட்டிகுடி முருகன் பிள்ளைத்தமிழ் | கவியரசு கு. நடேசக்கவுண்டர் |
| 68. | எண்கண் பிள்ளைத்தமிழ் | சிதம்பர முனிவர் |
| 69. | எம். ஜி. ஆர். பிள்ளைத்தமிழ் | ? |
| | **ஏ** | |
| 70. | ஏசுநாதர் பிள்ளைத்தமிழ் | கவிஞர் இ. குற்ருலம் |
| 71. | ஏசுநாதர் பிள்ளைத்தமிழ் | கி. சாமிநாதபிள்ளை |
| 72. | ஏம்பல் முத்தையன் பிள்ளைத்தமிழ் | அப்பாசாமிப் புலவர் |
| 73. | ஏம்பல் முத்தையா சுவாமிகள் பிள்ளைத்தமிழ் | முத்தையசுவாமி |
| 74. | ஏர்வாடி நபி பிள்ளைத்தமிழ் | குலாம் மரைக்காயர் |
| | **ஐ** | |
| 75. | ஐயனர் பிள்ளைத்தமிழ் | அப்பாசாமிப் புலவர் |

க

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 76. | கச்சிக்குமரகோட்டக் கடவுள் பிள்ளைத்தமிழ் | அரன்வாயில் வேங்கடசுப்புப் பிள்ளை |
| 77. | கடம்பர்கோயில் பிள்ளைத்தமிழ் | வீரசைவக் கனகசபைக் கவிராயர், உடையார்பாளையம் |
| 78. | கண்டனூர் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் | மழவராயனேந்தல் சதாவதானம் பாலசுப்பிரமணிய ஐயர் |
| 79. | கண்ணன் பிள்ளைத்தமிழ் | பெரியாழ்வார் |
| 80. | கதிரைமலைக்கந்தன் பிள்ளைத்தமிழ் | ஈழநாடு க. சிதம்பரநாதன் |
| 81. | கதிர்காமப் பிள்ளைத்தமிழ் | கருணாலய பாண்டியப் புலவர் |
| 82. | கமலாலய அம்மன் பிள்ளைத்தமிழ் | வைத்தியநாத தேசிகர் |
| 83. | கம்பர் பிள்ளைத்தமிழ் | நா. மீனாட்சிசுந்தரம் |
| 84. | கம்பர் பிள்ளைத்தமிழ் | பண்டிதை அசலாம்பிகை |
| 85. | கம்பர் பிள்ளைத்தமிழ் | புலவர் முத்து சம்பந்தன் |
| 86. | கம்பன் பிள்ளைத்தமிழ் | நா. கனகராசையர் |
| 87. | கம்பாளசாமியார் பிள்ளைத்தமிழ் | ? |
| 88. | கம்பை முருகர் பிள்ளைத்தமிழ் | சோணாசல பாரதியார் |
| 89. | கலைசைச்செங்கழுநீர் விநாயகர் பிள்ளைத்தமிழ் | சிவஞானமுனிவர் |
| 90. | கலைஞர் பிள்ளைத்தமிழ் | புலவர் வேதா |

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| 91. கலைமகள் பிள்ளைத்தமிழ் | கி. வேங்கடசாமி ரெட்டியார் |
| 92. கலைமாமகளார் பிள்ளைத்தமிழ் | சுந்தரக் கவிராயர் |
| 93. கழனிவாசல் திருவருணசல தேசிக ரெத்தினப் பிள்ளைத்தமிழ் | சிவசுப்பிரமணிய தேசிகர் |
| 94. கழுகாசலமூர்த்தி பிள்ளைத்தமிழ் | ? |
| 95. கழுகுமலைப் பிள்ளைத்தமிழ் | காளிச்சுவாமிகள் |
| 96. கழுகுமலைக் கந்தன் பிள்ளைத்தமிழ் | அருணசலப் புலவர் |
| 97. கள்ளப்பிரான் பிள்ளைத்தமிழ் | ? |
| 98. கன்னிமரி பிள்ளைத் தமிழ் | வித்துவான் எஸ். தம்பிரான்தோழப் பிள்ளை |
| 99. கன்னியாகுமரிப் பகவதியம்மன் பிள்ளைத்தமிழ் | நீ. கணபதி ஆசாரியார் |

## கா

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| 100. காங்கேயன் பிள்ளைத்தமிழ் | கொடிக்கொண்டான் பெரியன் ஆதிச்சதேவன் |
| 101. காஞ்சி காமாட்சியம்மை பிள்ளைத்தமிழ் | காஞ்சிபுரம் சிதம்பரமுனிவர் |
| 102. காஞ்சி சங்கராச்சாரியார் பிள்ளைத்தமிழ் | அருட்கவி சேதுராமன் |
| 103. காஞ்சிமுனி சந்திரசேகரேந்திரர் பிள்ளைத்தமிழ் | அருட்கவி தேவி கருமாரிதாசர் |
| 104. காத்தியாயனரிருப்பு சுவர்ணம்பிகை பிள்ளைத்தமிழ் | வடுகநாத தேசிகர் |

| நூற்பெயர் | | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 105. | காந்தி பிள்ளைத்தமிழ் | ராய. சொக்கலிங்கம் பிள்ளை |
| 106. | காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 107. | காந்தியடிகள் பிள்ளைத்தமிழ் | நாமக்கல் கவிஞர் |
| 108. | காந்தியடிகள் பிள்ளைத்தமிழ் | மு, கோ. இராமன் |
| 109, | காமராசர் (பச்சைத்தமிழர்) பிள்ளைத்தமிழ் | பாவலர் சுமாச |
| 110. | காமாட்சியம்மை பிள்ளைத்தமிழ் | அருட்கவி தேவி கருமாரி தாசர் |
| 111. | காரணப் பிள்ளைத்தமிழ் | ஈழம் வித்வத்தீபம் அப்துல்காதர் புலவர் |
| 112. | காவை முருகன் பிள்ளைத்தமிழ் | கலைவாணர் |
| | **கி** | |
| 113. | கிருஷ்ணசுவாமி பிள்ளைத்தமிழ் | ஆயர்பாடி கண்ணன் நல்லான் |
| 114. | கிறித்துநாதர் பிள்ளைத்தமிழ் | பிரான்சிசு பிள்ளை |
| | **கு** | |
| 115. | குகையூர் பெரியநாயகியம்மன் பிள்ளைத்தமிழ் | ஆனையம்பட்டி, மகாவித்துவான் அப்பாவையர் |
| 116. | குமரமலைப் பிள்ளைத்தமிழ் | மு. வீரபத்திரக்கவிராயர் |
| 117. | குருதட்சிணமூர்த்தி சுவாமிகள் பிள்ளைத்தமிழ் | அரு. சோமசுந்தரன் |
| 118. | குருந்தமலை முருகன் பிள்ளைத்தமிழ் | சிரவை. கந்தசாமி அடிகள் |
| 119. | குருந்தமலை முருகன் பிள்ளைத்தமிழ் | தாண்டவராயப் புலவர் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 120. | குருவாயூரப்பன் பிள்ளைத்தமிழ் | பாலகவி மு. கோ. இராமன் |
| 121. | குலசை அறம்வளர்த்த நாயகி அம்மன் பிள்ளைத்தமிழ் | குலசேகரன்பட்டினம் தெய்வசிகாமணிக் கவிராயர் |
| 122. | குலோத்துங்கசோழன் பிள்ளைத்தமிழ் | ஒட்டக்கூத்தர் |
| 123. | குன்றக்குடி பிள்ளைத்தமிழ் | தேவகோட்டை சின்னையச் செட்டியார் |
| 124. | குன்றை முருகன் பிள்ளைத்தமிழ் | மழவராயனேந்தல் சுப்பிரமணிய பாரதியார் |
| | **கொ** | |
| 125. | கொங்குக் குமரி பிள்ளைத்தமிழ் | செங்கை பொதுவன் |
| 126. | கொளஞ்சியப்பர் (முருகன்) பிள்ளைத்தமிழ் | தி. செ. முருகதாச சுவாமிகள் |
| | **கோ** | |
| 127. | கோட்டாற்றுப் பிள்ளைத்தமிழ் | ஷெய்குத் தம்பிப் பாவலர் |
| 128. | கோட்டிமாதவன் பிள்ளைத்தமிழ் | பீமகவிப் புலவர் |
| 129. | கோமதியம்மை பிள்ளைத்தமிழ் | புளியங்குடிப் பிள்ளை |
| 130. | கோமதியம்மை பிள்ளைத்தமிழ் | முத்துவீரக் கவிராயர் |
| 131. | கோயிலூர்த் திருநெல்லையம்மை பிள்ளைத்தமிழ் | தஞ்சை அஷ்டாவதானம், சுப்பிரமணிய ஐயர் |
| | **ச** | |
| 132. | சங்கரகுமாரர் பிள்ளைத்தமிழ் | பொன்னுயிரங் கவிராய மூர்த்திகள் எனும் சிந்தாமணிப்பிள்ளை |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 133. | சங்கரநாராயணர் பிள்ளைத்தமிழ் | அண்ணாமலை ரெட்டியார் |
| 134. | சச்சிதானந்த விநாயகர் பிள்ளைத்தமிழ் | சங்கர குமார முனிவர் |
| 135. | சத்தியஞான பண்டாரம் பிள்ளைத்தமிழ் | ? |
| 136. | சரபோஜிராசன் பிள்ளைத்தமிழ் | புலவர் வீ. சொக்கலிங்கம் |
| | **சா** | |
| 137. | சாமிநாதன் பிள்ளைத்தமிழ் | சாமிநாத பிள்ளை |
| | **சி** | |
| 138. | சிட்டநாதன் பிள்ளைத்தமிழ் | மங்கைபாகக் கவிராயர் |
| 139. | சிதம்பரம், பாண்டிநாயகம், முருகப்பெருமான் பிள்ளைத்தமிழ் | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் |
| 140. | சிரவை, கந்தசாமி சுவாமிகள் பிள்ளைத்தமிழ் | கவியரசு கு. நடேசக் கவுண்டர் |
| 141. | சிரவை, கருணாம்பிகை பிள்ளைத்தமிழ் | தி. செ. முருகதாச சுவாமிகள் |
| 142. | சிரவை. தண்டபாணிக்கடவுள் பிள்ளைத்தமிழ் | சிரவை, கந்தசாமி அடிகள் |
| 143. | சிவகாமி பிள்ளைத்தமிழ் | காரைக்குடி சொக்கலிங்கஞ் செட்டியார் |
| 144. | சிவகாமி பிள்ளைத்தமிழ் (தில்லை) | மு, ரா. அருணாசலக் கவிராயர் |
| 145. | சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ் | கிருஷ்ணானந்தயோகி எனும் கிருஷ்ணையர் |
| 146. | சிவகிரிக் குமரக்கடவுள் பிள்ளைத்தமிழ் | எட்டயபுரம், ஆ. கருத்தமுத்துப்பிள்ளை |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 147. | சிவஞான பாலைய சுவாமிகள் பிள்ளைத்தமிழ் | துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் |
| 148. | சிவஞானமுனிவர் பிள்ளைத்தமிழ் | வை. செல்லையாச் செட்டியார் |
| 149. | சிவந்தெழுந்த பல்லவராயன் பிள்ளைத்தமிழ் | படிக்காசுப் புலவர் |
| 150. | சிவபுரம் மீனும்பிகை பிள்ளைத்தமிழ் | செந்நெற்குடிப் பீமகவிப் புலவர் |
| 151. | சிவமலைப் பிள்ளைத்தமிழ் | ? |
| 152. | சிவயோகநாயகி பிள்ளைத்தமிழ் | ? |
| 153. | சிவானந்தன் பிள்ளைத்தமிழ் | ? |
| | **சீ** | |
| 154. | சீரங்கநாதர் பிள்ளைத்தமிழ் | கோவிந்தப்பிள்ளை |
| | **சு** | |
| 155. | சுந்தரமூர்த்திசுவாமிகள் பிள்ளைத்தமிழ் | பாலூர் வேலுத்தேசிகர் |
| 156. | சுந்தரர் பிள்ளைத்தமிழ் | இராம. சொ. சொக்கலிங்கம் |
| 157. | சுந்தரர் பிள்ளைத்தமிழ் | கனகராஜய்யர் |
| 158. | சுந்தரர் பிள்ளைத்தமிழ் | காரைக்குடி சொக்கலிங்கஞ் செட்டியார் |
| 159. | சுப்பிரமணியக்கடவுள் க்ஷேத்திரக் கோவைப் பிள்ளைத்தமிழ் | காஞ்சிபுரம் சிதம்பரமுனிவா |
| 160. | சுப்பிரமணியசுவாமி பிள்ளைத்தமிழ் | ராம. கு. மெ. மெய்யப்பச் செட்டியார் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 161. | சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ் | வேல்முருகக் கவிராயர் |
| 162. | சுயம்பிரகாசதேசிகர் பிள்ளைத்தமிழ் | தாண்டவராய முனிவர் |
| 163. | சுவாமிமலை முருகன் பிள்ளைத்தமிழ் | கவியரசு கு. நடேசக் கவுண்டர் |
| | **சூ** | |
| 164. | சூடிக்கொடுத்தநாச்சியார் பிள்ளைத்தமிழ் | ? |
| | **செ** | |
| 165. | செங்குந்தர் பிள்ளைத்தமிழ் | ஞானப்பிரகரசமுனிவர் |
| 166. | செங்கோட்டு வேலவர் பிள்ளைத்தமிழ் | ? |
| 167. | செண்பை ஞானப்பிரகாசர் பிள்ளைத்தமிழ் | செண்பையர் காவலர் |
| 168. | செந்தமிழன்னை பிள்ளைத்தமிழ் | பாவலர் சுமாச |
| 169. | செந்தில் வள்ளிநாயகி பிள்ளைத்தமிழ் | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் |
| 170. | செந்நெற்குடிச் சண்முகநாதன் பிள்ளைத்தமிழ் | பீமகவிப் புலவர் |
| 171. | செப்பறைப் பிள்ளைத்தமிழ் | சே. ரா. சுப்பிரமணியக் கவிராயர் |
| 172. | செயங்கொண்ட சோழீசர் பிள்ளைத்தமிழ் | முத்தப்பச் செட்டியார் |
| 173. | செய்குதாவூது அலியுல்லா பிள்ளைத்தமிழ் | சொர்ணகவி நயினுமுகம்மது பாவாப்புலவர் |
| 174. | செழியதரையன் பிள்ளைத்தமிழ் | அந்தகக்கவி வீரராகவ முதலியார் |
| 175. | சென்னிமலையாண்டவர் பிள்ளைத்தமிழ் | குந்தாணி சாமிநாதப் புலவர் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 176. | சென்னை கந்தசாமிப் பிள்ளைத்தமிழ் | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் |
| 177. | சென்னை முருகன் பிள்ளைத்தமிழ் | ? |
| 178. | சென்னை விநாயகர் பிள்ளைத்தமிழ் | கச்சியப்ப முனிவர் |
| | **சே** | |
| 179. | சேக்கிழார் பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 180. | சேக்கிழார் பிள்ளைத்தமிழ் | வித்துவான் சி. செகந்நாதாச்சாரியார் |
| 181. | சேதுபர்வதவர்த்தனியம்மை பிள்ளைத்தமிழ் | சீர்காழி அருணாசலக் கவிராயர் |
| 182. | சேயூர் (அ) செய்யூர் முருகன் பிள்ளைத்தமிழ் | அந்தகக்கவி வீரராகவ முதலியார் |
| 183. | சேலம் (Fairlands) ஞானசுப்பிரமணிய சுவாமி பிள்ளைத்தமிழ் | கவிஞர் அடிகள் கு. ஆ. அரங்கநாதனார்-ஈரோடு |
| 184. | சேறைத் தவம்பெற்ற நாயகி பிள்ளைத்தமிழ் | மு. ரா. அருணாசலக் கவிராயர் |
| | **சொ** | |
| 185. | சொக்கநாதர்மலை முருகன் பிள்ளைத்தமிழ் | கவிஞர் அடிகள் கு. ஆ. அரங்கநாதனார் |
| 186. | சொர்ணபுரியம்பிகை பிள்ளைத்தமிழ் | ? |
| 187. | சொரூபானந்தர் பிள்ளைத்தமிழ் | தத்துவராயர் |
| | **சோ** | |
| 188. | சோமசுந்தர விநாயகர் பிள்ளைத்தமிழ் | தேவகோட்டை சக்திவேல்பிள்ளை |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| | **சௌ** | |
| 189. | சௌந்தரியநாயகி பிள்ளைத்தமிழ் | வீரசேகர சுப்பைய ஞானதேசிகேந்திர சுவாமிகள் |
| 190. | சௌமியநாராயணமூர்த்தி (திருக்கோட்டியூர்) பிள்ளைத்தமிழ் | சே. சுப்பராய ஐயர் |
| | **ஞா** | |
| 191. | ஞானசித்தர் பிள்ளைத்தமிழ் | திருவையாறு முத்துசாமிப் பாரதி |
| 192. | ஞானாம்பிகை பிள்ளைத்தமிழ் | ? |
| 193. | ஞானானந்த சுவாமிகள் பிள்ளைத்தமிழ் | ? |
| | **த** | |
| 194. | தணிகைப் பிள்ளைத்தமிழ் | கந்தப்ப தேசிகர் |
| 195. | தணிகைப் பிள்ளைத்தமிழ் | தண்டபாணி சுவாமிகள் |
| 196. | தண்டபாணி சுவாமிகள் பிள்ளைத்தமிழ் | தி. செ. முருகதாச அடிகள் (மாதை) |
| 197. | தமிழரசி பிள்ளைத்தமிழ் | காந்திமதிநாதன் |
| 198. | தமிழன்னை பிள்ளைத்தமிழ் | பாவலர் சுமாச |
| | **தி** | |
| 199. | திரிபுரசுந்தரி பிள்ளைத்தமிழ் | முத்துக்குமரன் |
| 200. | திருஉறந்தை, காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 201. | திருக்குடந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ் | காஞ்சி சபாபதி முதலியார் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 202. | திருக்கு(ள)டந்தை வடிவேலன் பிள்ளைத்தமிழ் | மதுரை மகாவித்துவான் சு. சபாபதி முதலியார் |
| 203. | திருக்குருகூர் வேங்கடநாதன் பிள்ளைத்தமிழ் | ? |
| 204. | திருக்குற்றாலப் பிள்ளைத்தமிழ் | திரிகூட ராசப்பக் கவிராயர் |
| 205. | திருக்கோகர்ணம் பெரியநாயகி பிள்ளைத்தமிழ் | நா. கனகராசய்யர் |
| 206. | திருச்சுழியல் துணைமாலையம்மை பிள்ளைத்தமிழ் | வ. சு. செங்கல்வராய பிள்ளை (முற்பாதி) கவியரசு கு. நடேசக் கவுண்டர்(பிற்பாதி) |
| 207. | திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் | பகழிக்கூத்தர் |
| 208. | திருச்செந்தூர்ப் பிள்ளைத்தமிழ் | புன்னைவனநாத முதலியார் |
| 209, | திருச்செங்கோட்டுவேலவர் பிள்ளைத்தமிழ் | வீமண்ணப் புலவர் |
| 210. | திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ் | இராம. சொ. சொக்கலிங்கம் |
| 211. | திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ் | (கல்கத்தா நூலகச் சுவடி நிலையம் சுவடி எண் ஏ, சி. சி. 3196) |
| 212. | திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழ் | காரைக்குடி சொக்கலிங்க ஐயா |
| 213. | திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ் | சீர்காழி அருணாசலக் கவிராயர் |
| 214. | திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ் | சைவ எல்லப்ப நாவலர் |
| 215. | திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ் | தணிகைமணி செங்கல்வராயப் பிள்ளை |
| 216. | திருஞானசம்பந்தர் பிள்ளைத்தமிழ் | மாசிலாமணி தேசிகர் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 217. | திருத்தணிகைச் சிங்காரவேலர் பிள்ளைத்தமிழ் | தணிகைமணி செங்கல்வராயப் பிள்ளை |
| 218. | திருத்தணிகை முருகன் பிள்ளைத்தமிழ் | கந்தப்பையர் |
| 219. | திருத்தணிகை முருகன் பிள்ளைத்தமிழ் | வேங்கட சுப்பிரமணியன் |
| 220. | திருத்தவத்துறைப் பெருந்திருப் பிராட்டியார் பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 221. | திருத்துருவமலை முருகர் பிள்ளைத்தமிழ் | சான்றூர் குப்பம் இராமநாத பிள்ளை |
| 222. | திருநாவுக்கரசர் பிள்ளைத்தமிழ் | இராம. சொ. சொக்கலிங்கம் |
| 223. | திருநாவுக்கரசர் பிள்ளைத்தமிழ் | காரைக்குடி சொக்கலிங்க ஐயா |
| 224. | திருநாவுக்கரசர் பிள்ளைத்தமிழ் | மு. கோ, இராமன் |
| 225. | திருநாவுக்கரசர் பிள்ளைத்தமிழ் | வாகீசபக்த நாவலர் க. அப்பாவையர் |
| 226. | திருநெல்வேலிக் காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் | அழகிய சொக்கநாத பிள்ளை |
| 227. | திருப்பரங்கிரிப் பிள்ளைத்தமிழ் | மு. ரா. அருணசலக் கவிராயர் |
| 228. | திருப்பரங்குன்றம் முருகன் பிள்ளைத்தமிழ் | ? |
| 229. | திருப்பழனிப் பிள்ளைத்தமிழ் | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் |
| 230. | திருப்பெருமணநல்லூர் திருவெண்ணீற்றுமை பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 231. | திருப்பெரும்பேற்று முருகர் பிள்ளைத்தமிழ் | ப, சிங்காரவேலு முதலியார் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 232. | திருப்பேரூர் முருகர் பிள்ளைத்தமிழ் | பேரூர் சிதம்பர சுவாமிகள் |
| 233. | திருப்போரூர் முருகன் பிள்ளைத்தமிழ் | பேரூர் சிதம்பர சுவாமிகள் |
| 234. | திருமயிலைச் சிங்காரவேலர் பிள்ளைத்தமிழ் | தாண்டவராய முனிவர் |
| 235. | திருமயிலைப் பிள்ளைத்தமிழ் | (திருமயிலைப் பிரபந்தங்கள்) |
| 236. | திருமலைக் குமரன் பிள்ளைத்தமிழ் | ? |
| 237. | திருமலை முருகன் பிள்ளைத்தமிழ் | கவிராச பண்டாரம் |
| 238. | திருமலை வயிரவர் பிள்ளைத்தமிழ் | நகரம் சங்கரபாண்டியனார் |
| 239. | திருமாலிருஞ்சோலை பிள்ளைத்தமிழ் | நெற்குப்பை வைரவய்யா |
| 240. | திருமாலிருஞ்சோலையழகர் பிள்ளைத்தமிழ் | ? |
| 241. | திருவதிகை வீரட்டானப் பெரியநாயகி பிள்ளைத்தமிழ் | சுப்பராயச் செட்டியார் |
| 242. | திருவரன்குளம் பெரியநாயகியம்மன் பிள்ளைத்தமிழ் (புதுக்கோட்டை சமஸ்தானம்) | ? |
| 243. | திருவருணாசல தேசிகர் பிள்ளைத்தமிழ் | சிவசுப்பிரமணிய தேசிகர் |
| 244. | திருவருணை உண்ணாமுலையம்மை பிள்ளைத்தமிழ் | சோணாசலபாரதி |
| 245. | திருவருணை முருகன் பிள்ளைத்தமிழ் | அருணைவடிவேல் முதலியார் |
| 246. | திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ் | அமுதபாணியார் |

| எண் | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 247. | திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ் | கவிஞர் அரு. சோமசுந்தரம் |
| 248. | திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ் | திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் |
| 249. | திருவனந்தை சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ் | வன்னியப்பப் பாவலர் |
| 250. | திருவாஞ்சியம் மங்களநாயகி பிள்ளைத்தமிழ் | ? |
| 251. | திருவாமாத்தூர் முத்தாம்பிகை பிள்ளைத்தமிழ் | தவத்திரு முருகதாச அடிகள் |
| 252 | திருவாவடுதுறை அம்பலவாணதேசிகர் பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 253. | திரு. வி. க. (தமிழ்த்தென்றல்) பிள்ளைத்தமிழ் | பாவலர்சுமாச |
| 254. | திருவிடைக்கழி முருகர் பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 255. | திருவிலஞ்சி முருகன் பிள்ளைத்தமிழ் | கவிராச பண்டாரம் |
| 256. | திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத்தமிழ் | மார்க்கசகாயர் |
| 257. | திருவீரை மரகதவல்லியம்மை பிள்ளைத்தமிழ் | பழனிக் குமார பண்டாரம் |
| 258. | திருவெண்காட்டுப் பெரியநாயகியம்மை பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 259. | திருவெண்ணெய் நல்லூர் வைகுந்தநாதர் பிள்ளைத்தமிழ் | திருமேனிக் கவிராயர் |
| 260. | திருவேற்காடு தேவி கருமாரியம்மன் பிள்ளைத்தமிழ் | புலவர் வீரபத்திரனார் |
| 261. | தில்லைச் சிவகாமியம்மை பிள்ளைத்தமிழ் | கிருட்டிண ஐயர் |
| | **து** | |
| 262. | துரைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழ் | மணி அப்பாவு ஐயர் எனும் வாகீசபக்த நாவலர் |
| | **தூ** | |
| 263. | தூத்துக்குடி பாகம்பிரியாவம்மை பிள்ளைத்தமிழ் | ? |
| | **தே** | |
| 264. | தேசிகவிநாயகம் பிள்ளை (சிவக்கவிமணி) பிள்ளைத்தமிழ் | பாவலர் சுமாச |
| 265. | தேசிகவிநாயகர் பிள்ளைத்தமிழ் | கணபதி ஆச்சாரி |
| 266. | தேவகோட்டை நகரச்சிவாலயத்து முருகப்பெருமான் பிள்ளைத்தமிழ் | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் |
| 267. | தேவைப் பிள்ளைத்தமிழ் | தஞ்சை சதாவதானம் சுப்பிரமணிய ஐயர் |
| 268. | தேவை முருகன் பிள்ளைத்தமிழ் | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| | **ந** | |
| 269. | நத்ஹறொலி ஆண்டவர் பிள்ளைத்தமிழ் | பிச்சை இபுருகீம் புலவர் |
| 270. | நபிகள் நாதர் பிள்ளைத்தமிழ் | கவிமணி மு. சண்முகனர் |
| 271. | நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் | செய்குமீரான் புலவர் |
| 272. | நபிகள் நாயகம் பிள்ளைத்தமிழ் | நாஞ்சில் ஷா |
| 273. | நபி சல்லல்லாகு அலேகிவசல்லம் பிள்ளைத்தமிழ் | செய்யது அனபிய்யா சாகிபு புலவர் |
| 274. | நபிச்சக்கரவர்த்தி நபிகள் நாயகம் (ஸல்) பிள்ளைத்தமிழ் | த. கா. காதர்கனி |
| 275. | நபிநாயகம் பிள்ளைத்தமிழ் | செய்யது அளபிய்யா சாகிபு புலவர் |
| 276. | நபிநாயகம் பிள்ளைத்தமிழ் | பீர் முகம்மதுப் புலவர் |
| 277. | நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ் | (1932) ? |
| 278. | நல்லூர் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ் | அப்புக்குட்டி ஐயர், யாழ்ப்பாணம் |
| 279. | நல்லூர் சுப்பிரமணியர் பிள்ளைத்தமிழ் | பாலசுப்பிரமணிய ஐயர், யாழ்ப்பாணம் |
| | **நா** | |
| 280. | நாகூர் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் | ஆரிபு நாவலர் |
| 281. | நாகூர் பிள்ளைத்தமிழ் | சாகூல் அமீதுப் புலவர் |
| 282. | நாகூர் பிள்ளைத்தமிழ் | பிச்சை இபுராகீம் புலவர் |
| 283. | நாகைப்பட்டினம் நீலாயதாட்சியம்மை பிள்ளைத்தமிழ் | கிருட்டினசாமி உபாத்தியாயர் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 284. | நால்வர் பிள்ளைத்தமிழ் | எஸ். சச்சிதானந்தம் பிள்ளை |
| 285. | நால்வர் பிள்ளைத்தமிழ் | செங்கல்வராய பிள்ளை |
| 286. | நால்வர் பிள்ளைத்தமிழ் | சொக்கலிங்கஞ்செட்டியார் |
| | **நெ** | |
| 287. | நெல்லியோடையம்மன் பிள்ளைத்தமிழ் | அச்சுவேலி வைத்தியநாதச் செட்டியார் |
| 288. | நெல்லை காந்திமதியம்மை பிள்ளைத்தமிழ் | அழகிய சொக்கநாதப்பிள்ளை |
| 289. | நெல்லை முக்கண் அனுமார் பிள்ளைத்தமிழ் | ? |
| | **ப** | |
| 290. | பச்சைநாயகியம்மன் (பேரூர்) பிள்ளைத்தமிழ் | செட்டிபாளையம் முத்துநயினுத்தை முதலியார் |
| 291. | பட்சிராஜன் பிள்ளைத்தமிழ் | ? |
| 292. | பதரிவன முருகன் பிள்ளைத்தமிழ் | ? |
| 293. | பத்திராசலம் இராமர் பிள்ளைத்தமிழ் | கந்தசாமி அடிகள், சிரவை |
| 294. | பத்மநாபர் (திருவனந்தபுரம்) பிள்ளைத்தமிழ் | சங்கர சுப்பிரமணியக் கவிராயர் |
| 295. | பரசமயகோளரியார் பிள்ளைத்தமிழ் | அங்கப்ப நாவலர் |
| 296. | பரவைநாச்சியார் பிள்ளைத்தமிழ் | குருசாமியடிகள் |
| 297. | பருவத வர்த்தனியம்மை பிள்ளைத்தமிழ் | அருணசலக் கவிராயர் |
| 298. | பவானி வேதநாயகியம்மை பிள்ளைத்தமிழ் | கொங்குநாடு மு. ரா. கந்தசாமிக் கவிராயர் |

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| 299. பழமுதிர்சோலை முருகன் பிள்ளைத்தமிழ் | ? |
| 300. பழனிப் பிள்ளைத்தமிழ் | அருணாசலப் பண்டாரம் |
| 301. பழனிப் பிள்ளைத்தமிழ் | சின்னப்ப நாயக்கர் |
| 302. பழனிப் பிள்ளைத்தமிழ் | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் |
| **பா** | |
| 303. பாகம்பிரியா அம்மை (திருக்கண்ணபுரம்) பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 304. பாத்திமா நாயகி பிள்ளைத்தமிழ் | செய்து மீரான் புலவர் |
| 305. பாபநாசம் உலகம்மை பிள்ளைத்தமிழ் | விக்கிரமசிங்கபுரம் நரசிம்மக் கவிராயர் |
| 306. பாரதிதாசன் (பாவேந்தர்) பிள்ளைத்தமிழ் | பாவலர் சுமாச |
| 307. பாரதிதாசன் (பாவேந்தர்) பிள்ளைத்தமிழ் | புலவர் புலமைப்பித்தன் |
| 308. பாரதியார் (மகாகவி) பிள்ளைத்தமிழ் | பாவலர் சுமாச |
| 309. பாவநாசம் எனும் சிங்கை உலகம்மை பிள்ளைத்தமிழ் | நமச்சிவாயக் கவிராயர் |
| 310. பாவாணர் (மொழி ஞாயிறு) பிள்ளைத்தமிழ் | பாவலர் சுமாச |
| 311. பாளையம் கேசியெம் பிள்ளைத்தமிழ் | அரிது ஆ. ஆரிது |
| **பி** | |
| 312. பிரமவித்தியா நாயகி பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 313. பிள்ளைத்திருநாமம் | தத்துவராய சுவாமிகள் |

E

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| | **பு** | |
| 314. | புதுச் சந்நிதிக் கந்தர் பிள்ளைத்தமிழ் | ? |
| 315. | புதுவை அருணாசலம் பிள்ளைத்தமிழ் | ? |
| 316. | புதுவை திரிபுரசுந்தரி பிள்ளைத்தமிழ் | புதுவை முத்துக்குமரப்பக் கவி |
| 317. | புதுவை முருகன் பிள்ளைத்தமிழ் | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் |
| | **பூ** | |
| 318. | பூவைமாநகர்க் குமரன் பிள்ளைத்தமிழ் | சிவசுப்பிரமணியச் செட்டியார் |
| | **பெ** | |
| 319. | பெரியநாயகி பிள்ளைத்தமிழ் | த. க. சுப்பராயச் செட்டியார் |
| 320. | பெரியநாயகியம்மை பிள்ளைத்தமிழ் | சொக்கலிங்க சிவப்பிரகாச சுவாமிகள் |
| 321. | பெரியநாயகியம்மை பிள்ளைத்தமிழ் | சரவணபவன் |
| 322. | பெரியார் (அடலேறு) பிள்ளைத்தமிழ் | பாவலர் சுமாச |
| 323. | பெரியாழ்வார் பிள்ளைத்தமிழ் | தனபால பதுமாவதி அம்மையார் |
| 324. | பெருங்கருணையம்மை பிள்ளைத்தமிழ் | சி. கே. சுப்பிரமணிய முதலியார் |
| 325. | பெருந்துறை அகத்தீச்சுரர் பிள்ளைத்தமிழ் | காரைக்குடி சொக்கலிங்க ஐயா |
| | **பே** | |
| 326. | பேரூர் சாந்தலிங்கர் பிள்ளைத்தமிழ் | சிரவை கந்தசாமி அடிகள் |
| 327. | பேரூர் பச்சைநாயகி பிள்ளைத்தமிழ் | சிரவை கந்தசாமி அடிகள் |
| | **ம** | |
| 328. | மகரக்குழையன் பிள்ளைத்தமிழ் | ? |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 329. | மகரநெடுங்குழைக்காதர் (தென்திருப்பேரைப்) பிள்ளைத்தமிழ் | திருமேனிக் கவிராயரின் சீடர் |
| 330. | மங்களநாயகியம்மை பிள்ளைத்தமிழ் | மு. சிவராமபிள்ளை |
| 331. | மங்களாம்பிகை (குடந்தை) பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 332. | மங்களேசுவரி பிள்ளைத்தமிழ் | ? |
| 333. | மங்கையர்க்கரசியார் பிள்ளைத்தமிழ் | கவியரசு கு. நடேசக் கவுண்டர் |
| 334. | மணத்தட்டைப்பிள்ளையார் பிள்ளைத்தமிழ் | வீரசைவக் கனகசபைக் கவிராயர் |
| 335. | மணவை திருவேங்கடமுடையான் பிள்ளைத்தமிழ் | ? |
| 336. | மந்திரமூர்த்தி விநாயகர் பிள்ளைத்தமிழ் | ஆ. சக்திவேற் பிள்ளை |
| 337. | ம. பொ சி. (டாக்டர்) பிள்ளைத்தமிழ் | டாக்டர் த. அமிர்தலிங்கம் |
| 338. | மயிலம் முருகன் பிள்ளைத்தமிழ் | வைத்தியநாத தேசிகர் |
| 339. | மயிலம்மை பிள்ளைத்தமிழ் | வைத்தியநாத தேசிகர் |
| 340. | மயிலாடுதுறைப் பிள்ளைத்தமிழ் | ? |
| 341. | மயில்வாகனன் பிள்ளைத்தமிழ் | கந்தப்பன் |
| 342. | மயின்மலைப் பிள்ளைத்தமிழ் | சின்னய்யச் செட்டியார் |
| 343. | மயூரகிரி முருகன் பிள்ளைத்தமிழ் | குன்றக்குடி சுப்பிரமணியக் கவிராயர் |
| 344. | மயூரகிரி முருகன் பிள்ளைத்தமிழ் | மழவை சிதம்பர பாரதியார் |
| 345. | மருதாசலக் கடவுள் பிள்ளைத்தமிழ் | ? |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 346. | மருதாசலப் பிள்ளைத்தமிழ் | வி. நா. மருதாசலக் கவுண்டர் விளாங்குறிச்சி |
| 347. | மருதாசல முருகர் பிள்ளைத்தமிழ் | வ. மு. அருணாசலக் கவிராயர் |
| 348. | மறைமலை அடிகளார் பிள்ளைத்தமிழ் | அரு. சோமசுந்தரன் |
| 349. | மறைமலை அடிகளார் பிள்ளைத்தமிழ் | பாவலர் சி. அன்பானந்தம் |
| 350. | மறைமலையடிகளார் பிள்ளைத்தமிழ் | புதுமைக்கவிஞர் அரங்கசாமி |
| 351. | மறைமலையடிகளார் (தமிழியக்கம்) பிள்ளைததமிழ் | பாவலர் சுமாச |

**மா**

| | | |
|---|---|---|
| 352. | மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ் | இராம. சொ. சொக்கலிங்கம் |
| 353. | மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ் | காரைக்குடி சொக்கலிங்க ஐயா |
| 354. | மாணிக்கவாசகர் பிள்ளைத்தமிழ் | வே. முத்துசாமி ஐயர் |
| 355. | மாதவச் சிவஞான சுவாமிகள் பிள்ளைத்தமிழ் | ? |
| 356. | மாருதி பிள்ளைத்தமிழ் | ? |
| 357. | மாறன் பிள்ளைத்தமிழ் | இரத்தினக் கவிராயர் |

**மீ**

| | | |
|---|---|---|
| 358. | மீனாட்சி பிள்ளைத்தமிழ் | சிவகுருநாதன் |
| 359. | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் | குமரகுருபர சுவாமிகள் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| 360. | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் | பீமகவி |
| 361. | மீனாம்பிகை பிள்ளைத்தமிழ் | ? |
| | **மு** | |
| 362. | முகய்யதீன் ஆண்டவர் காரணப் பிள்ளைத்தமிழ் | அப்துல்காதிறுப் புலவர் |
| 363. | முகய்யதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் | சவ்வாதுப் புலவர் |
| 364. | முகய்யதீன் ஆண்டவர் பிள்ளைத்தமிழ் | செய்யிது முகய்யதீன் கவிராயர் |
| 365. | முத்திருளப்பப்பிள்ளை பிள்ளைத்தமிழ் | நமச்சிவாயப் புலவர் |
| 366. | முத்துக்குமரபூபன் பேரில் பிள்ளைத்தமிழ் | ? |
| 367. | முத்துக்குமாரசாமிப் பிள்ளைத்தமிழ் | குமரகுருபர சுவாமிகள் |
| 368. | முத்துச்சாமி மகிபர் பிள்ளைத்தமிழ் | ? |
| 369. | முத்துவீரப்ப சுவாமிகள் பிள்ளைத்தமிழ் | ? |
| 370. | முருகவேள் பிள்ளைத்தமிழ் | ? |
| 371. | முருகன் பிள்ளைத்தமிழ் | மார்க்கசகாயர் |
| 372. | முருகப்பத் தேவர் பிள்ளைத்தமிழ் | ? |
| | **மூ** | |
| 373. | மூத்தநயினார் பிள்ளைத்தமிழ் | ? |
| 374. | மூத்த பிள்ளையார் பிள்ளைத்தமிழ் | அதிராவடிகள் |
| | **மெ** | |
| 375. | மெய்க்கண்பேரில் பிள்ளைத்தமிழ் | ? |

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| 376. மெய்ஞ்ஞானப் பிள்ளைத்தமிழ் | சுவாமியடியான் உபாத்தியாயர் |
| **மே** | |
| 377. மேலைக்கொழுந்து மாமலைக் குமரன் பிள்ளைத்தமிழ் | கா. நா. நெல்லையப்பர் |
| **மை** | |
| 378. மைவண்ணன் பிள்ளைத்தமிழ் | சடகோபன் |
| **யோ** | |
| 379. யோகநாயகியம்மன் பிள்ளைத்தமிழ் | ? |
| 380. யோகி சாத்தையர் பிள்ளைத்தமிழ் | ? |
| **யௌ** | |
| 381. யௌவனும்பிகை பிள்ளைத்தமிழ் | பலராமய்யர் |
| **ர** | |
| 382. ரமணர் பிள்ளைத்தமிழ் | அருட்கவி சேதுராமன் |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| | **வ** | |
| 383. | வடகரைப் பெரியசாமித்துரை பிள்ளைத்தமிழ் | கைலாசநாதக் கவிராயர் |
| 384. | வடதிருமுல்லைவாயில் கொடியிடையம்மை பிள்ளைத்தமிழ் | தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் |
| 385. | வடதிருமுல்லைவாயில் கொடியிடையம்மை பிள்ளைத்தமிழ் | மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை |
| 386. | வடபழனிப் பிள்ளைத்தமிழ் | திருவாமாத்தூர் தவத்திரு முருகதாச அடிகள் |
| 387. | வடிவுடையம்மை (திருவொற்றியூர்) பிள்ளைத்தமிழ் | கனகசபைத் தம்பிரான் |
| 388. | வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ் (வயிரவன்கோயில்) | காசிமேட்டு வைரக்கண் வேலாயுதப் புலவர் |
| 389. | வடிவுடையம்மை பிள்ளைத்தமிழ் | நடராசக் கவிராயர் |
| 390. | வயிரவசுவாமி பிள்ளைத்தமிழ் | ப, நரசிங்கப்பிள்ளை |
| 391. | வள்ளலார் (அருட்கடல்) பிள்ளைத்தமிழ் | பாவலர் சுமாச |
| 392. | வள்ளற்பெருமான் பிள்ளைத்தமிழ் | காமாட்சிநாதன் |
| 393. | வள்ளிநாயகி பிள்ளைத்தமிழ் | தண்டபாணி சுவாமிகள் வண்ணச்சரபம் |
| 394. | வள்ளுவர் பிள்ளைத்தமிழ் | அருணாசலக் கவிராயர் |

| நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|
| 395. வள்ளுவர் பிள்ளைத்தமிழ் | வேலாயுதக் கவிராயர் |
| **வா** | |
| 396. வாகடப் பிள்ளைத்தமிழ் | வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் |
| 397. வாராகி பிள்ளைத்தமிழ் | ? |
| 398. வாலம் பிள்ளைத்தமிழ் | புதுவயல் செல்லப்பன் |
| **வி** | |
| 399. விக்டோரியா மகாராணியார் பிள்ளைத்தமிழ் | ? |
| 400. விட்டினர் அம்மையப்பன் பிள்ளைத்தமிழ் | அந்தகக்கவி வீரராகவ முதலியார் |
| 401. விநாயகர் பிள்ளைத்தமிழ் | ? |
| 402. வில்வவனம் முத்துக்குமாரர் பிள்ளைத்தமிழ் | அருணாசலக்கவி (இராமநாடகர் அல்லர்) |
| **வீ** | |
| 403. வீரவேலாயுதசுவாமி பிள்ளைத்தமிழ் | ? |
| 404. வீரை நவனீதகிருட்டினன் பிள்ளைத்தமிழ் | அண்ணாமலை ரெட்டியார் |
| **வெ** | |
| 405. வெற்றிவேற்கடவுள் பிள்ளைத்தமிழ் | ? |

| | நூற்பெயர் | ஆசிரியர் பெயர் |
|---|---|---|
| | **வே** | |
| 406. | வேங்கடாசலபதி பிள்ளைத்தமிழ் | ? |
| 407. | வேங்கடேசுரெட்டன் பிள்ளைத்தமிழ் | தெய்வநாயகர் |
| 408. | வேங்கடேசுவரர் பிள்ளைத்தமிழ் | ? |
| 409. | வேதநாயகி பிள்ளைத்தமிழ் | கந்தசாமிக் கவிராயர் |
| 410. | வேதநாயகியம்மன் பிள்ளைத்தமிழ் | ? |
| | **வை** | |
| 411. | வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ் | கள்ளப்பிரான் கவிராயர் |
| 412. | வைகுந்தநாதன் பிள்ளைத்தமிழ் | வரதராசப் பிள்ளை |
| 413. | வைணவி பிள்ளைத்தமிழ் | வைணவி சங்க அங்கத்தினர்கள் |
| 414. | வைத்தியப் பிள்ளைத்தமிழ் | ? |
| | **ற** | |
| 415. | றசூல் நாயகம் பிள்ளைத்தமிழ் | மீரான் சாகிபு புலவர் |
| | **ஷெ** | |
| 416. | ஷெய்குதாவூது வலியுல்லா பிள்ளைத்தமிழ் | சொர்ணகவி நயினுர் முகம்மதுபாவா புலவர் |
| | **ஜ** | |
| 417. | ஜகத்குரு (காஞ்சி சங்கரர்) பிள்ளைத்தமிழ் | கவிஞர் திலகம் கலைவாணர் |
| | **ஜெ** | |
| 418. | ஜெய்லானி பிள்ளைத்தமிழ் | ? |

இனி, பிள்ளைத்தமிழ் ஆசிரியர் 3-ம் பாட்டில் கூறிய இலக்கணம், பன்னிருபாட்டியல் இலக்கணத்தோடு ஒத்து இருக்கிறது. வச்சணந்திமாலைக்கும், சிதம்பரப்பாட்டியலுக்கும், பருவ வைப்பு மாறுபட்டுளது.

காப்புப் பருவத்துத் தொடக்கத்தில், 'காப்புப்பருவம்' என்று குறிக்காமல், 'கடவுள் துதி' எனக்குறிப்பிட்டுள்ளார். இதில், திருமால் வணக்கம், கணபதி வணக்கம், புட்டாபூரத்தியம்மன் வணக்கம், பராசக்தி வணக்கம், உமையவள் வணக்கம், சூரியர் சந்திரர் வணக்கம், பலதேவர் வணக்கம் வாழ்த்து வணக்கம், குரு வணக்கம் ஆகிய ஒன்பது துதிப் பாடல்களும் காப்புப் பருவமாகப் பேசப்படுகின்றன.

காவடிச்சிந்து சந்தத்தில் அமைந்துள்ள நான்காம் பாடல் 28 சீர் கழி நெடிலாசிரிய விருத்தமாகும். இதில் ஒவ்வொரு அடியிலும் உள்ள 5, 12, 19, 26 ஆகிய சீர்களில் 'ண' கர எதுகை வருவது சிறப்பு. பிறபாடல்களும், நல்ல சந்தங்களில் அமைந்துள்ளன.

இந்நூலாசிரியரான அங்கப்பநாவலர் தன் குருவின் மீது, மீதூர்ந்த அன்பினால் இந்நூலை இயற்றியுள்ளார்.

கடவுளரையும், கடவுட்பெண்டிரையும், தாங்கள் போற்ற விரும்புவரையும் குழந்தையாகப் பாவித்துப் பாடுவது மரபு. அவ்வாறு வந்த வழித்தோன்றலில் மன்னர்களையும், பெரியோரையும், குருவையும் பாடிய பிள்ளைத் தமிழ்கள் எழுந்தன. இராசாதிராசன் முதலான மன்னர் பிள்ளைத்தமிழ், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் இயற்றிய சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.சிவப்பிரகாச சுவாமிகள் பிள்ளைத்தமிழ் முதலானவை முறையே மேற் கூறியவற்றிற்கு எடுத்துக்காட்டாகும்.

இவ்வழியில் குருவின் மேல் பாடிய பிள்ளைத்தமிகளில் இதுவும் ஒன்ருகும். இவரது வரலாறு காலம் முதலிய வற்றை ஆய்வதற்கு வாய்ப்பில்லை. அறிந்தவர்கள் அறிவிப் பின் நன்றிக் கடப்பாடுடையேம்.

இந்நூலில் ஏடு பெயர்த்தெழுதுவோரின் கை தவறுத லால் சில எழுத்துகள், சொற்கள், வரிகள் விடுபட்டுள்ளன. கூடிய மட்டில் நிறைவு செய்யப்பட்டுளது.

இந்நூல், தஞ்சாவூர், E. N. T. டாக்டர் துரைராஜ் அவர்களிடமிருந்து அன்பளிப்பாகப் பெற்ற சுவடிகளில் ஒன்று. இதன் அருமை கருதி, இதனைப் பதிப்பிக்க அனு மதியளித்தவர், தஞ்சை மாவட்ட (முன்னுள்) ஆட்சியர், உயர்திருவாளர் ச. மெய்கண்டதேவன், இ.ஆ.ப., அவர்கள் ஆவார்கள். எமது நூலகப் பதிவெண் 1410-அ கொண்ட இச்சுவடியினை, மிகவும் ஆர்வத்துடன் பதிப்பித்துள்ளேன்.

இச்சுவடியினை அன்பளிப்பாகத் தந்தவருக்கு முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதனைப் பதிப் பிக்க அனுமதியளித்த (முன்னுள்) மாவட்ட ஆட்சியர் அவர் கட்கும், இதனை வெளியிடும் பேறு பெற்ற தற்போதைய இயக்குநரும், தஞ்சை மாவட்ட ஆட்சியருமாகிய திருவாளர் ஆர். சத்பதி, இ.ஆ.ப., அவர்கட்கும், அவ்வப்போது ஊக்க மளித்த, இந்நூலக நிருவாக அதிகாரி பொறுப்பும், நூலகரு மாகிய திருவாளர் அ. பஞ்சநாதன், எம். ஏ., பி. லிப்சி., அவர்கட்கும், இந்நூலை அச்சிடப் பொருளுதவி புரிந்த நடுவண் அரசுக்கும், நன்முறையில் அச்சிட்டுத்தந்த அச்சகத் தாருக்கும் எமது நன்றி உரித்தாகிறது.

இந்நூலைப் பதிப்பிக்கத் தோன்ருத் துணையாய் நின்ற பரம்பொருளுக்கு வணக்கத்தைக் கூறிக்கொள்கிறேன்.

இந்நூலில், குற்றங் குறைகளிருப்பின், அவற்றை எமக்கும் தெரிவித்தால் இனிவரும் பதிப்புக்கள் திருத்தம் பெறும் பெரும் பேற்றினை அடைவார்கள். இதுபோன்ற அரிய சுவடிகளையும், நூல்களையும், தங்களிடம் வைத்துள்ள பெருங்கொடையாளர்கள் அவற்றை எம்மிடம் தந்துதவினல், பல்லாயிரம் பேர்கள், இவ்வாறு பதிப்பிப்பதன் மூலம் படித்துப் பயனடையும் புண்ணியத்தினை அடைவார்கள்.

உலகம் உய்ய, இந்நூலுடைக் குருபக்தி அருள் செய்யுமாக.

இங்ஙனம்,

**புலவர் வீ. சொக்கலிங்கம்,**
தமிழ்த்துறை,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்,
11—11—83

உ

# பாட்டு முதற்குறிப்பு அகரமுதலி


| | பக்க எண். |
|---|---|
| அட்டகெசம் | 22 |
| அண்டபகிரண்ட | 11 |
| அண்ட மடுக்கி | 13 |
| அரவறுகொக்க | 4 |
| அரியுமயனு | 47 |
| அரியுமாயயனுமா | 2 |
| அரியுமாயவனி | 32 |
| அருமறைத் | 21 |
| அருவேவுருவே | 13 |
| அழியுஞ்சனன | 25 |
| ஆசைவேரற்ற | 10 |
| ஆலக்கொடுங்கோப | 6 |
| இட்டமூலத் | 23 |
| இருக்குமாறு | 43 |
| இலகுமதி | 3 |
| இறப்பும்பிறப்பு | 35 |
| உம்பர்க்குமெட்டாத | 11 |
| உம்பர்தேடரி | 9 |
| உருவம்படைத்துப் | 44 |
| எரிக்கின்ற | 23 |
| ஓராயிரங்கோடி | 32 |
| ககனமுகடெட்டி | 50 |
| கஞ்சன்விட் | 3 |
| கண்டிதவகண்டித | 58 |
| கரமுருட்டி | 56 |
| கருமுகங்கொண்டு | 54 |
| கல்லேத்தொழுது | 34 |
| கல்விப்பயனே | 43 |
| களிக்குங்கொடுங் | 10 |
| கற்குருவை | 20 |
| குருவேபரசமைய | 1 |
| குழைக்குங்கலவை | 15 |
| கொங்கங் கன்னட | 15 |
| கொடியிடை | 27 |
| கொத்துத்திரண்ட | 29 |
| கொந்தேறு நாண்மலர் | 8 |
| கொலேவளேக்குங் | 49 |
| கோலங்குறியாத | 7 |
| கோவே வருக | 31 |
| சகமீதிலுன் | 38 |
| சத்தமெழுந் | 29 |
| சமரம்பரிபுர | 41 |
| சாலப்பிரபஞ்ச | 58 |
| சாற்றரியகாப்பு | 1 |
| சித்துமசித்து | 35 |
| சின்மயநிராமய | 6 |
| சுழிவாய் | 26 |
| சொல்லுஞ்சுருதி | 47 |
| சொல்விற்பன | 31 |
| தண்டாமரை | 34 |
| தமரக்கடலே | 21 |
| தர்க்கமேயிடு | 52 |
| தவமறைக்கமையாத | 50 |
| தவளநிராதர | 12 |

| | பக்க எண். |
|---|---|
| தனுகரணபுவனுதி | 12 |
| திருவேடமுநீள் | 14 |
| தேருதசனனங் | 30 |
| நவகோடிகிரணம் | 54 |
| நவயோகமெட் | 59 |
| நாட்டங்கொண்டு | 48 |
| நித்தமே நீ கொண்ட | 37 |
| நீதமாம் | 37 |
| நெஞ்சாருநினே | 42 |
| நேசமுறு | 51 |
| பகர்வதற்கரிதான | 24 |
| பங்கயநற்றிரு | 14 |
| பஞ்சபூதமுமாகி | 9 |
| பண்டைநான்முகனு | 39 |
| பாசத்தடங்காவி | 55 |
| பாராளுமண்டலிகர் | 55 |
| பூண்டுகொண் | 20 |
| பூவார்செஞ் | 26 |
| பேதியாமலம் | 39 |
| பொன்னேக்காட்டி | 16 |
| மகதரெட்டியர் | 49 |
| மங்காதரீங்கார | 52 |
| மஞ்சேறுதண்ண | 8 |

| | பக்க எண். |
|---|---|
| மணிகொண்ட | 1 |
| மதியாமல்வாய் | 38 |
| மருட்பேயனைய | 46 |
| மருத்தாமரைப்பூ | 45 |
| மறியுங்கொலே | 41 |
| மாலயனும்வீறு | 1 |
| மானதவாவியின் | 17 |
| முப்பத்துமுக்கோடி | 51 |
| மூலத்துவாரத்தை | 33 |
| மூவாமுதலு | 45 |
| மெய்வைத்த | 19 |
| மேலோக | 19 |
| வஞ்சநிரம்ப | 17 |
| வடவரை | 27 |
| வடிக்கும்பல | 25 |
| வடிவிலிருக்கு | 28 |
| வானுற்றமதி | 56 |
| விஞ்சைசேர்முதிய | 57 |
| விடமேவுகண்ட | 5 |
| விரிந்தபுவனம் | 30 |
| வெங்கட்கோடு | 18 |
| வேதனேப்படு | 40 |
| வையமனேத்தும் | 44 |

திருநெல்லைப்

# பரசமயகோளரியார் பிள்ளைத்தமிழ்

—: வித்துவசிரோமணி அங்கப்ப நாவலர் பாடியது :—

## காப்பு

1 மாலயனும் வீறு மறைநாலுந் தேடரிய
கோலப் பரசமைய கோளரியே—சாலவத்[1]
தற்பரமாம் பிள்ளைத் தமிழ்பாட வந்துதவுங்
கற்பகமே சற்குருவே காப்பு.

## குருவணக்கம்.

2 குருவே பரசமைய கோளரியே ஞானக்
கருவே கருணைக் கடலே—திருவாகு
நெல்லைக் கரசே நினதருளே யல்லாம
லில்லைக் கரைசே ரிடம்.

## பிள்ளைத்தமிழ்

3 சாற்றரிய காப்புச்செங் கீரைத்தால் சப்பாணி
மாற்றரிய முத்தமே வாரானை—யேற்றுசீ
ரம்புலியே சிற்றிலே யாய்ந்த சிறுபறையே
பம்புசிறு தேரோடும் பத்து.

## காப்புப் பருவம்

### கடவுள் துதி (திருமால் துதி)

4 மணிகொண்ட (த)ண்ணருட் பச்சைப் பசுந்துளப
மருமலர்[2] வாவி மலரும்

1 சாலத என்றுளது. 2 = ?.

வண்டருத் தண்டுளிப் பிரசமது வூற்றுமொரு
வனசமா ளிகைத ழைக்கும்
அணிகொண்ட செம்மணி முலைத்திருத் தன்வரத
வழக னைப்பழ காதபுத்
தமுதத் திருப்பாற் கடற்பொலி யனந்தசய
னத்தனை வெழுத்தல் செய்வாம்.
திணிகொண்ட பொற்சிலைச் சிலையாள னைப்புதிய
தெள்ளமு தையள கேசனைச்
சிவஞான போதனைக் குருராய தீபனைத்
திருநெல்லை யாதி பதியைப்
பணிகொண்ட மூவுலக ளந்தானை யண்டம்
படைக்கின் றதனி நாதனைப்
பரசமய கோளரியை முதியமா மறைதேடு
பாலகனைக் காத்த ருள்கவே[1]. 1

## கணபதி வணக்கம்

5 அரியுமா யயனுமா யரனுமா யாதியா
யைந்துபூ தங்க ளாகி
யாகண்ட மெங்கும் பரந்தசிவ வொளியாகி
யமல மாகிய நாதனை
விரியுமா நிலமுமுணர் சருவநா[2] தனையிலகு
வேத நாதனை விமலனை
வென்றிசேர் பரசமய கோளரி குருநாத
விசுவ நாதனைப் புரக்கப்
பெரியதொந் திப்பேழை வயிறுங் குறுந்தாட்
பிணிப்புறு சிலம்பி னணியும்
பெட்புறுபு ழைக்கையும் புகர்முகச் சிறுவிழிப்
பேரொளியு நீண்ம குடமுந்
தரைதெரிய முற்பார தக்கதை வரைந்திடுந்
தனிக்கோடு மழகு பெறவே
தந்தவட் டத்திலகு மூலத்தின் ஞானந்
தழைத்த தந்திப் பிள்ளையே ! 2

1 காக்கவென்றே எனல்வேண்டும். 2 சரவநா என்றுளது.

## புட்டாபூரத்தம்மை வணக்கம்

6 கஞ்சன்விட் டேவுநெட்டை வெஞ்சகட் டுடுதைத்த
கஞ்சநற் றளூயர்த் தகரா
கன்றிடப் பேய்முலைக்க ணுஞ்சுவைத் தாவிதுய்த்து
கந்தசக்[1] ராயு தத்தநீள்
செஞ்சிலைக் கால்குழைத்து வஞ்சகப் போரரக்கர்
சிந்திடச் சீறு கொற்றமால்
செங்கதிர்ப் பூண்முடிப்பொன் விஞ்சையர்க்
சிங்கமெய்ச் சீர்பு ரக்குமால் [கேயளித்த
வெஞ்சினத்தோ டுருத்தெழுந்து[2] பொற்றுள் பெயர்த்து
வெங்கணைக் கூளி கொட்டவே
வெம்பிமுச்[3] சூலம்விட் டெரிந்திடத் தாடுக்கதன்
விண்புகப் பாய்தி றத்தினுள்
வஞ்சிசக ராகரத்தி யஞ்சலர்க் காமுரத்தி
வண்டுயப் பூத ரத்தி
சூழ்மண்டலத் தாதரத்தி கங்கையெட் டாபரத்தி
மங்கைபுட் டாபூ ரத்தியே ! 3

## பராசக்தி வணக்கம்

### வேறு

7 இலகுமதி தனைவைத்த உயர்(முடி) யொருமுக்கண்
மன்னனைச் சேர்ந்த கற்பினுள்
இறைவிதிரி புரைகொற்ற வி(மலை)திரி புவனத்தை
மின்னிடைப் பூத்த பொற்பினுள்
இருசிகர தனவட்ட மிலகுமரி யவள்சத்தி
விண்ணவர்க் கேற்ற சித்தி(யா)ள்
இலகுமயி டனை(யெ)ற்று சரணியொரு கலக(த்தி)
மின்னெனைக் காட்டு சுட்டியாள்

---

1 தந்தசக என்றுளது. 2 டுறதெழுநது என்றுளது.
3 வெமபிமுஞ என்றுளது.

பலகலையு மருள்சுத்த (வ)யிரவி என்னருமைக்
கண்ணனை[1] விற்கோட்(டு நெற்றி)யாள்
பசியநிற வடிவத்தி திரிபதகை யிருள் து(ற்ற)
வண்ணமைத் தீட்டயிற் கண்ணிஞள்[2]
பழையமறை தொழுநித்ய மலையினிறை யவள்பதம்
மன்னுமெய்க் காட்சி முத்தியாள்
பரமிதிரி ந(யனத்தி) கவுரிபரை யுமைசத்தி
பொன்னடி போற்றி நிற்குமால்.
அலகில்வான் முறைபெற்ற சகளவடி வனைவெற்றி
யண்ணலைத் தோட்டி தழ்ப்பொதி
யரியுலவு மலரிதுற்று புயமுகிலை வளர்பச்சை
வண்ணனைத் தோட்டு மத்திசூழ்
அகிலமகி தலமெச்சு குணபதியை யருள்வைத்த
கண்ணனைப் பூத்த பத்திசேர்
அருள்கவுநற் பரசித்தர் தவமுயல வருள்கொற்ற
வண்ணனைத் தொட்டி மிக்கவே
கலகமிட வருதுட்ட நிருதர்முடி பொடிபட்டு
மண்விழப் பூட்டு நெட்டைவேல்
கதுவிவிடு பிலவுகர முருக்குகன மதுரித்த
பண்ணிசைப் பார்த்தொ ளித்தபேர்
கலிபரசு கெடிபுக்க நிதியுதவு தருவொத்த
தென்னனைக் கூர்த்த பத்திசேர்
கருணைபுரி தவசு(த்)த பரசமய சிவசித்த
மன்னனைக் காத்த ளிக்கவே. 4

## உமையவள் வணக்கம்

### வேறு

7 அரவறு கொக்க முடித்த சடைக்கொரு சிறுபி
றைச்சுற்றி
வளைத்திடை கட்டிய வமர ரெதிர்த்த புரத்தை
நகைத்துநீ

1 கணனனை என்றுளது. 2 கஞள் என்றுளது.

ளழலை யுடைத்த திரத்தர்ம கத்துவ சிவசம வத்தர்க
ருத்திலி ருப்பவ ரருளிட மெச்சி யிருக்கும்
வனப்பினுள்.
வருபொரு நெட்டியில் மைக்கண்ம டக்கொடி
மணியணி செட்டை
யுலைந்தமு லைக்குயில் மலைவள ருத்தம பத்தினி
சத்திதாய்
மதுரமொ ழிக்குத லைக்கிளி சிற்பரை யெனையடி
மைக்கொளு
முக்கனி கற்புள வடிவுமை சித்ரப தத்தை
வழுத்துவாம்
விரிபுவ னத்தை விதிக்கும் விதிக்குறு துயர்கெட நற்கம
லத்தை வித்திடு விரகுள சித்ரக ரத்தன
விசித்ரமால்
விடைதரு நெற்றி விழிக்கண் விழித்தடி யவர்மு
மலத்தை
யெரித்ததி ரத்தன்முன் வினைகெட முக்குண
மற்றவ னிச்சைகூர
பரிபுர பதமம சைத்துநெ ரித்தொரு சரணை யெடுத்து
வளைத்து விரித்தொளிர் பரவெளி வட்டவொ
ளிக்குளொ ளிக்குளே
பவுரி நடித்து மயக்கு மயக்கனை யறிவுறி வுக்குளு
திர்த்ததி ரட்சிவ பரசம யத்தனை நித்தல்
புரக்கவே. 5

## சந்திரசூரியர் வணக்கம்
## வேறு

9 விடமேவு கண்டத்த ரெட்டுக்கு மெட்டாத
மெஞ்ஞான போதகுருவை
மென்பொற் பொகுட்டுத் தகட்டகட் டுக்கமல
வீட்டயன் தேடுகுருவை
தடமார் பணுமுடிக் கட்செவிப் பஃறலைச்
சர்ப்பவணை மீதுதுயிலுந்
தானவன் கனவிலுங் காணாத நாதனைச்
சற்குருப் பரசமயனைத்

தொடர்வான சீதளத் துடுபதித் தலைவனுஞ்
சுருதிமுறை தெரிதலைவனுந்
தோற்றிருட் படலங் களைந்தகில தலமுமுதல்
சோதிமுடி மீதெழுவனும்
படரேம கிரியிடஞ் சுற்றுமன் னவருமப்
படிவலஞ் சுற்றுகோவும்
பதினறு கலைபெருகு சோமனுட ராதித்தர்
பன்னிருவ ருங்காக்கவே. 6

## பலதேவர் வணக்கம்

10 ஆலக் கொடுங்கோப வாலத்தை யுண்டாரு
மாதிப் பரஞ்சோதியா
யாலித்து விண்பூமி பாரத்தை யுண்டானு
மாகிக் கரந்தானைநீள்
கோலப் பரம்பரன் வேடத்த டங்காத
கோரக் கொடுஞ்சீயமோர்
கோதற் றெழும்போத நாதக் கொழுந்தான
கோவைப் பரிந்தாள்குவீர்
சீலத்தர் கொண்டாடு ஞானப் பரஞ்சோதி
தேடிக் கரைந்தாகமே
சீறக் கொடுங்காம வாதைக் கழுந்தாது
தேனுற் றுறங்காமலே
மால்பெற் றெடுங்காத போதத்தி னின்றுடு
மாசித் தடங்காமனீள்
வாழ்வைப் பெருந்தேக மேபெற்று நந்தாத
வானத் தருந்தேவரே! 7

## வாழ்த்து வணக்கம்

11 சின்மய நிராமய வகண்டபரி பூரண
வதீதப் பிரவாக ஞானத்
தெள்ளமுத வானந்த வேலையுள் ளழுந்தித்
தியங்கியுள் விசுத்தி யறவே

சொன்மயமி லாதவூ மன்கனு வெந்தநற்
றூசுகா னற்ச விலநேர்
சுத்தியினி லாசிதந் தருஞ்சாய்கை தானுவச்
சோரநப் பூரிப் புயங்கங்
கன்மமிக வேசெய்யு மிந்திரசா லம்பேடி
கையின்வாட் சமய மோட்சங்
கண்டுகா ணுதுபோற் புரியட்ட காயமுங்
காட்சியுங் காட்டி நீக்கி
தன்மயமி லாமலொரு சென்மமு மிலாமலே
ச(ச்)சிதா னந்த வடிவாய்த்
தந்ததே சிகனெந்தை பரசமய கோளரி
சற்குரு (நற்)புகழ்[1] வாழியே! 8

## குருவணக்கம்

12 கோலங் குறியாத நீதந்த
காணுக் கண்கள் மினுமினுக்குங்
குறளைக் குறியா நீதந்த
கேளாச் செவிகள் கோயில்சுற்றும்
சாலக் குறியா நீதந்த
சாகாக் கால்கள் பரசரணந்
தன்னை வணங்கா நீதந்த
வேகாத் தலைகாண் சஞ்சலமாய்க்
காலங் குறியா நீதந்த
கோணு மனங்கண் முப்பொழுதுங்
கருத்தி விருத்தி நானுன்னைப்
போற்காணு மறிவுங் கைக்கொண்டாய்
சீலங் குறியா தருந்தவத்தோர்
தேடுங் கருணைப் பெருவாழ்வே
செல்வா ஞானப் பரசமையச்
சிங்கா துங்கப் பெருமாளே.[2] 9

**காப்புப் பருவம் முற்றும்.**

---

1 சற்குரு புகழ் என்றுளது. 2. 9 செய்யுட்களே உள்ளன 10-வது செய்யுளில்லை.

## செங்கீரைப் பருவம்.

13 மஞ்சேறு தண்ணறுப் பூந்துணர்ப் போதுவிரி
மரம்பொழி லுடுத்த தெய்வ
மாநதிப் பாடலங் கம்பையாற் றிற்கமல
மாளிகையில் வீற்றி ருக்கும்
பஞ்சேறு சேவடித் திருவினொடு வெள்ளனப்
பார்ப்புவெண் பிள்ளை குலவிப்
பகுவாய் பிளந்தருங் களநிமி ரத்தொரு
புறச்சிறை யலகுபருவ நோக்கி
யஞ்சாயன் மடவனப் பேடுதன் சேவலொடு
மகமகிழ்ந் தணிசி றையினு
லணைத்துப் புரிந்தலகு வாயினிரை யூட்டுமன
மதிகவள மோங்கு செல்வச்
செஞ்சாலி வயல்சூழு நெல்லைநக ராதிபதி !
செங்கீரை யாடி யருளே !!
சிமயபுய சதுரபர சமயகோ ளரிராய !
செங்கீரை யாடி யருளே !! 1

14 கொந்தேறு நாண்மலர்க் குழலியர்கள் விழிவேல்
குழைத்துணை கிழித்து மாரன்
கொலைப்பகழி யைத்துரந் தாடவர்கள் மார்பிடங்
குடையவால் வளைக விப்பப்
பந்தாடி யொருபவுரி கொண்டாட மேகலைப்
பருமணித் துகைதெ ரிப்பப்
படர்முலை திறந்ததில் வழிந்தொழுகு பாளிதக்
கலவையும் பண்பாடி (யே)வண்
டுந்தாத லர்த்தவிரி சோலையிற் பூந்தே
னொழுக்குமுகை விட்ட கமலத்
துறைந்தசெந் தேனுஞ்சி வந்தவா ழைக்கனி
கனிந்திட (மி)டைந்து வழியுஞ்
செந்தேனும் வயல்பெரு நெல்லைநக ராதிபதி !
செங்கீரை யாடி யருளே !!
சிமயபுய சதுரபர சமயகோ ளரிராய !
செங்கீரை யாடி யருளே !! 2

15 உம்பர்தே டரிதான நம்பனே யழியாத
வொண்கணே சிவரூபமே
யொன்றுமா யறிவுமாய் நின்றவா கமமாயை
யொன்றிடா வொருதீபமே
தம்பமே யிறவாத வின்பமே பிறவாத
சம்புவே தவயோகமே
சந்திரோ தயமேய பங்கமே முதலேய
சஞ்சலா நவதேறலே
யம்புரா சியிலேது யின்றமா தவனேய
னந்தனே யபிராமனே
யன்பனே யடியார்வ ணங்குகோ ளரியே
யலர்ந்ததா மரைவாசனே
செம்பொனே சிவஞான நம்பனே! யினிதாய
செங்கீரை யாடியருளே !!
[1]சிமயபுய சதுரபர சமயகோ ளரிராய!
செங்கீரை யாடி யருளே!! 3

16 பஞ்சபூ தமுமாகி யொன்றிடா தொழியாது
பண்படா தடியாதுளே
பம்பிடா துதியாது சம்பிடா திறவாது
பங்கமா யகலாதுநே
ரஞ்சுளே யமையாது நெஞ்சுளே தரியாத
னந்தமாய் விரியாதுவா
னந்தமாய் நிரையா தெழுந்திடா துருவாய
தடைந்திடா தருகாதுசேர்
கஞ்சவீ டடையாது வஞ்சர்பா லுணராது
கண்கொளா துயராதுமேல்
கன்றிடா தொளியோ சிவந்திடா துருவாய
கண்(படா) வதுநீகொலோ
செஞ்சொன்மா மறைதேடு சிங்கமே குருநாத !
செங்கீரை யாடியருளே !!
செங்கண்மா தவனுக வந்தகோ ளரிராய!
செங்கீரை யாடியருளே !! 4

---

1 இவ்வரி சுவடியில் இல்லை.

17 களிக்குங் கொடுங்காம வஞ்சாணை வம்முடைக்
காட்டைநாட் டத்துவாளாற்
களைகளைந் தறவெட்டி மூலவழன் மூட்டிக்
கனிந்தறிவு வேலிகட்டி
நெளிக்கின்ற மேட்டையஞ் சாட்சரக் கோட்டுமண்
வெட்டியா னிரைனிறைத்து
நெறியுடைக் கருணையங் கடலினீர் பாய்ச்சியுற
நினைமனம் பூத்தியேரிற்
குளிக்கின்ற வாசைக் கலப்பையைப் பூட்டிக்
குணக்கயிறு கொண்டிறுக்கிக்
குறையாத போதக் கொழுக்கொண்டு கீழுழுது
கோதிலா ஞானவித்தைத்
தெளிக்கின்ற பரசமய கோளரிக் குருநாத !
செங்கீரை யாடியருளே !!
திருநெல்லை யகளங்க செயவல்லி புணர்துங்க !
செங்கீரை யாடியருளே !! 5

18 ஆசைவே ரற்றசே னைத்திரளு மோகமத
வானையின் றிரளும்லோப
வாடலம் பரியுங்கு ரோதக்கொ டுந்தேரு
மணியணி நிறைத்து நீங்காப்
பாசமா கியகபா டங்களிட் டிறவாத
பஞ்சபூ தங்கள்காத்த
பழமலத் திட்டியொன் றிட்டெட்டு வாசலும்
பணியாத காலர்காக்க
நேசமா கியநங்கு ரம்பையங் கோட்டையை
நினைந்துநீ நினவினாலே
நிர்த்தூளி யாக்கிமுற் படாவினைக் கொம்மைகளை
நிபுடீக ரித்துவாசித்
தேசியே றிச்செயங் கொண்டசிவ சிங்கமே !
செங்கீரை யாடியருளே !!
திருநெல்லை யகளங்க செயவல்லி புணர்துங்க !
செங்கீரை யாடியருளே!! 6

19 உம்பர்க்கு மெட்டாத மூலத்தி னுலிதழு
முருவிச்சு வாதிட்டமூ
டோராறு மணிபூர கத்திலித ழெட்டிரண்
டுடுருவி நாலெட்டிதழ்த்
தம்பித்த ஞகதத் தனிமனே கடந்திதழ்
தாங்குபதி ஞறுடையதோர்
தனிவிசுத் திச்சிகர வீடெட்டி யாக்கினேத்
தலவித ழிரண்டுமுட்டி
ய(ம்)பொ(ற்)பொ குட்டகட் டாயிரஞ் சேந்தக
டழுந்துமா விந்தவீட்டி
லம்பிகை கிருபாகரி[1] பராசத்தி காணவெனே
யாண்டதாண் டவனடித்த
செம்பொற்ப தாம்புயப் பரசமய சிங்கமே!
செங்கீரை யாடியருளே!!
திருநெல்லே யகளங்க செயவல்லி புணர்துங்க!
செங்கீரை யாடியருளே!! 7

20 அண்டபகி ரண்டமற் றெண்டிசைக ளற்றுவா
ராழியோ ரேழுமற்றே
ழகிலதல மற்றட்ட மாநாக மற்றுமா
நாகமற் றிரவியற்றுத்[2]
துண்டமா மதியற்ரூே ரட்டபா லகரற்று
துன்பமற் றின்பமற்றுச்
சுருதியா கமமற்று நாளற்று நீள்கால
தொகுதியற் றற்றகாலம்[3]
விண்டவாண் பெண்ணென்று தித்திடாச் சுத்தத்தில்
வெளியாகி நாதமாகி
விந்துவா யோங்கார வட்டச் சதாசிவ(ம்)
விளங்கிய மகேசஞகித்

---

1 கிாபாகரி என்றுளது. 2 திரவியததுத என்றுளது. 3 றறகாலம என்றுளது.

திண்டருஞ் சிவன்மாலோ டயனெவையு மானவா!
செங்கீரை யாடியருளே!!
திருநெல்லை யகளங்க செயவல்லி புணர்துங்க!
செங்கீரை யாடியருளே!! 8

21 தனுகரண புவனுதி போகமா யோகமாய்த்
தண்ணளி நிறைந்தயோகந்
தானுகி ராசதத் தாமதச் சாத்துவித[1]ந்
தழைத்திடு மனம்புத்தியாய்
வினையுமாங் காரமாய்ச் சித்தமா யாதார
வீடாறு மாகிநீடும்
வேதமாய் மோட்சமா யனுபவிப் பவனுமாய்
விஞ்சையா யஞ்செய்பவனு
யனையாகி முதலாகி மகவாகி வினையாகி
யருளாகி யிருளாகிவேற்
கஞ்சலந் தானுகி சஞ்சலந் தானுகி
யறமற மிரண்டுமாகித்
தினை(ய)ளவு மணுவுமாய் மகமேரு வானவா!
செங்கீரை யாடியருளே!!
திருநெல்லை யகளங்க செயவல்லி புணர்துங்க!
செங்கீரை யாடியருளே!! 9

## வேறு

22 தவளநி ராதர முடியிலு லாவிய
த்ம்பா நம்பேறே
சகளக லாகர சுகசொரு பாமுக
சந்தார் மந்தார்நீள்
பவளச டாதர வமலம னோன்மணி
பங்கா வெங்கோவே
பவுரிகொ டாடிய நடனமு லாவிய
பண்பா திண்காவே

1 சாதவிதந் என்றுளது.

புவனமெ லாமுயி ரள்வள வாய்வளர்
பொன்றூ நின்றேனே
புதியது மாய்வரு பழமையு மாகிய
பொன்கா லுன்காலாற்
சிவசம யாதிப பரசம யாதிப!
செங்கோ செங்கீரை!!
திருநெல்லை மா நக ரிலகுதி வாகர!
செங்கோ செங்கீரை!!

**செங்கீரைப்பருவம் முற்றும்**

## தாலப்பருவம்

23 அண்ட மடுக்கித் திண்புவ னத்தைத்
தாழா தாழாதே
யம்புலி வைத்துச் செங்கதிர் வைத்துப்
போமா றேயாதே
பண்டச லப்பொற் றண்டநி றுத்திச்
சாயா தோயாதே
பம்பு மலைக்கைத் தெண்டிரை யிட்டுச்
சீறு தேறுதே
தொண்டர் வழுத்தப் பண்டுந டித்தாய்
தோலா தோராதே
துங்கமி குத்துப் பங்கமில் கொற்றச்
சூலா காலாலே
சண்டனு ரத்தைத் தண்டியு தைத்தாய்!
தாலோ தாலேலோ!!
சஞ்சல மற்றுச் செஞ்சொலி ருப்பாய்!
தாலோ தாலேலோ!!

24 அருவே வுருவே யமுதே யழகே
யாவே தாவேபே
ரறிவே செறிவே யலரே மணமே
யாதா ரா(நீ)தா
கருவே முளையே (வி)ளைவே புனலே
காலே வானேநீள்

கதிரே யொளியே யளியே வெளியே
கானே (தே)னே(சே)ர்
குருவே பொருளே சிவமே தவமே
(கு)றியே யறிவேமா
கொடியேன் வினையே கெடிபோய் விழவே
குணமே தரும்வாழ்வே
தருவே திருவார் சிவகோ ளரியே
தாலோ தாலேலோ!
தலமேழ் தொழவாழ் குருதே சிகனே
தாலோ தாலேலோ!! 2

25 திருவே டமுநீள் சடைநேர் விழவே
சேரா தோராதே
திருநீ றணிமே விடுதா வடமோர்
நூறு ரேடாதே
குருவே டமுமாய் வருவார் பொருண்மேல்
வீழ்வார் வாழ்வாரோ?
குருநா தனுநீ சிவயோ கியுநீ
கோமா னேதேவே
யருமா தவமே கருணை நிதியே
யாவாய் பாவாணு
வலமா விமலா கமலா சனனே
யாறு தாராவைந்
தருவே முகிலே சிவகோ ளரியே
தாலோ தாலேலோ!
தலமேழ் தொழவாழ் குருதே சிகனே
தாலோ தாலேலோ!! 3

## வேறு

26 பங்கய நற்றிரு வாவியி னுச்சி
யெழுந்துப ரந்துயரப்
பைஞ்சிறை தட்டிய வண்சிரல் கொத்தி
விழுந்த பழத்தோடுஞ்

செங்கயல் கொத்தி யதுக்(கி) யொதுக்கிய
திண்குரு குக்கூடே
சென்ஞெருரு நெட்டை மலங்கு மலக்கமு
டத்தாள் சிறைபின்னிப்
பங்கம ணக்கம ணக்க வுடைத்த
பழக்கனி தேறல்புகும்
(ப)ழனச் சால வழியெய்த் துவிழப்
பருவாளைகள் பகடுறழச்
சங்கமு ழங்குதென் னெல்லைக் கதிபா
தாலோ தாலேலோ!
தருமா முகிலே சிவகோ ளரியே
தாலோ தாலேலோ!! 4

## வேறு

27 கொங்கங் கன்னட மீழம ராடங்
குகு(த)ங் கலியாணங்
குருநா டச்சை யுரோ(ம)ம சலாமிடு
குச்ச(ரி) மச்சரியம்
வங்கம் மாளவம் வாரண மாகதம்
மகதங் காம்(பீ)லி
மலையா ளங்கோ வை(வத்)துறை டில்லி
வழங்கும் பைங்கோவை
சிங்கள மெங்குந் திசையெட் டுஞ்செ(ய)ஷ்த்
தம்பக் கொடிக(ட்டி)ச்
செகதல முழு(தும் பர)சம யச்சிவ
சிங்கஞ் சிங்கமெனச்
சங்கத் தமிழ்புகழ் நெல்லைக் கதிபா
தாலோ தாலேலோ!
தலமேழ் தொழவாழ் குருதே சிகனே
தாலோ தாலேலோ!! 5

## வேறு

28 குழைக்குங் கலவைச் செழுஞ்சா(ந்) தக்கொம்மைத்
திதலைக் குரும்பைமுலைக்

கொம்ப ரனையா ரமளி யினிற்கூடிக்
கணவ ருடனூடி
யிழைக்கும் பணியோ டிகலு முத்தையெறிய
மதன்மேற் பட்டதென்ன
வெழுந்து கருப்புச் சிலையைவ ளைத்திகணு
ணேற்றிச் சரமாரி
மழைக்கண் டிறந்த தெனப்பெய்ய மையல்
பெருக்கா லெடுத்(தெ)தறிய
வருத்து மலயப் பசுந்தென்றல் (வல்)வாய்ப்
புலிவந் தடைகிடந்து
தழைக்கு மலர்காவு (தெந்)நெல்லைத் தலைவா
தாலோ தாலேலோ!
சமயந் தழைக்கவந்த பரசமய களிறே
தாலோ தாலேலோ!! 6

## வேறு

29 பொன்னைக் காட்டிக் கவிகவர்ந்த
பொலிவா மென்ன வருங்கானிற்
புயலைக் காட்டிச் சுரங்கவர்ந்த
புதுமை போலக் குடைவானின்
மின்னைக் காட்டி யிருள்கவர்ந்த
மேன்மை போல மருளாக
விழியைக் காட்டி யொளிகவர்ந்த
விளக்கம் போலக் கதிரிரவி
மன்னைக் காட்டிப் பணிகவர்ந்த
மாற்ற மும்போல்ச் சிவவடிவாய்
மழுமான் கரத்து ளருட்பார்வை
வைத்து மனதுக் கெட்டா நின்
றன்னைக்(காட்)டி யெனைக்கவர்ந்த
சாலா தாலோ தலேலோ!
(சமயந்) தழைக்க வந்தபரசமய
களிறே தாலோ தாலேலோ!! 7

## வேறு

30 (மான)த வாவியின் மூலந் தாடழை
மலிநீ ரில்லாதே
வண்டுக ளுண்ணச் சுண்ண மலரத்தி
மலர்ப்பூ மலர்வதெனக்
கோனென வடிவுங் குணமுங் குறியுங்
கொள்கையு மில்லா நீர்க்
குண நிஷ் கிரியைப் பூதவு டம்பிற்
குணமாய் மணமாகித்
தீநர கினிலே வலியப் போய்விழ
நூலொடு சமயங்க
டேடிப் பூசனை வாசனை மந்தர
தியானஞ் செய்யாமற்
றூனவ ஞக நிறுத்திய குருவே
தாலோ தாலேலோ!
சமயதி வாகர பரசம யாதிப
தாலோ தாலேலோ!! 8

## வேறு

31 வஞ்சநி ரம்பு குரம்பைப் பாழை
வியாதிக் கொருகூட்டை
மாயம லத்தை யிறுக்கிய பையை
விகாரப் பழவீட்டைக்
கஞ்சன டைத்தவீ டக்கை மடஞ்செறி
காமக் கள்ளறையைக்
கனவிலு நினைவிலு நானென வெண்ணிக்
கழறிப் பிறவாமற்
பஞ்சியெ னும்பிர பஞ்சக் குரவர்
தமைப்போன் மருளாமற்
பரவெளி வட்டத் துறையற நின்றிடு
பவுரிப் பொற்சரணத்
தஞ்சமெ னக்கருள் சற்குரு நாதா
தாலோ தாலேலோ!

சமயதி வாகர பரசம யாதிப
தாலோ தாலேலோ!! 9

## வேறு

32 வெங்கட் கோடு மு(ம்)மலத்தை
வெட்டும் வீரச் சுடர்வாளே
வெய்ய மரணத் தூர்பிடுங்கி
வீட்டுங் களிறே யின்பதுன்பக்
கங்குற் கெழுந்த செங்கதிரே
கவலைப் பிணிக்கோ ருருமருந்தே
கரையே காணுப்[1] பெருஞ்சென்மக்
கடலைக் கடக்கு நாவாயே
பங்கப் படுத்து மஞ்ஞானப்
பசு(வை)ப் பாயும் போ(ர்ப்)புலியே
பரத்தை மறைக்குஞ் சட்சமயப்
பாஷாண் டியர்வாய் கிழிக்குநர
சிங்கப் பெருமாள் பரசமயச்
சிங்கப் பெருமா டாலேலோ!
செல்வா வகண்ட பரவெளியாந்
தேவா தாலோ தாலேலோ!! 10

தாலப்பருவம் முற்றும்.

---

1 சாணு என்றுளது.

## சப்பாணிப் பருவம்

33 மேலோக வானுளும் வச்சிரா (யுதக்க)டவுள்
வேந்துரிமை யும்புரந்தாய்
மெய்(ெ)காண்ட வைகுண்ட நாடாள வோராழி
விஷ்ணுவுக் குங்கொடுத்தாய்
பூலோக மாகண்ட மெவையும்ப டைக்கின்ற
போதயன் சிறைவிடுத்தாய்
பூமியந் தரசொர்க்க நீகட்டு மாளிகைப்
புறமலால் வேறு(மு)ளதோ
காலோடு தீயோடு நீரோடு மண்ணோடு
ககனத்தி னோடுநின்றாய்
கவுரியொரு பாகமிச் சாசத்தி மாயைக்
கடற்கரைக் கடந்ததேவா
சாலோக சாமீப சாரூப நாயகா!
சப்பாணி கொட்டியருளே!!
சகலகுரு வானபர சமயகோ னரிராய!
சப்பாணி கொட்டியருளே!! 1

### வேறு

34 மெய்வைத்த குருவைத்த போதத்தை நம்பாமல்
வீணிலுடன் மாய்த்துவிட்ட
வேதத்தை நம்பியறு சாத்திரக் குப்பைதனை
மேலிட்டு வட்டமிட்டுப்
பொய்வைத்த காமக் கொடுங்கள்ள வாமப்
புலைப்பேய் பிடித்துவானப்
புத்தமுத முண்ணாது வைத்தமுத முண்டுவெறி
புக்கிக் குடித்தடித்துக்
கைவைக்கு மழலிலுடல் பதைபதைப் ப(ற்ற)வக்
கள்ளர்கெடி வீழமோகக்
காமக் குரோதங் கெடுத்தஞ் செழுத்திற்
கரைந்துமத பேதமற்ற

(சை)வக்கு மூ ந்தழைய வருள்சொரியு மேகமே!
சப்பாணி கொட்டியருளே!!
சரமசர மெவையுமுள பரசமய குருநாத!
சப்பாணி கொட்டியருளே!! 2

35 பூண்டுகொண் டந்தந்த விரதவா திகளெலாம்
போற்றிநீ (யி)ட்டகு(றியி)ற்
புந்திவைத் துப்பட்டை (நா)மமிட் டுந்தனுப்
பூர்த்திபெற நீற்றையிட்டுங்
கூண்டுகொண் டேசந்த ன(க்கு)றிக ளிட்டும்வார்
குழைக்கா(தி) லோட்டையிட்டுங்
கோரக்க (நாத)ரென் (றேசிங்)க நாதங்
குறித்துக் குறித்திருந்தும்
வேண்டுசம யங்களே வ(ளவி)லாச் சமயமும்
விதித்தந்த முறைகடவுளும்
வெவ்வேறு நீசமைத் தொன்றுக்கு மெட்டாமல்
வெட்டவெளி யிற்றுண்டியே
தாண்டிநின் றனந்தத் தாண்டவம் புரிதேவ!
சப்பாணி கொட்டியருளே!!
சகலகுரு வானபர சமயகோ ளரிராய!
சப்பாணி கொட்டியருளே!! 3

36 கற்குருவை சொரூ(ப)ங் கொடுக்க(நி)ன் கால்பட்டு
கைபட்டு வேர்வுபட்டுக்
காசினியின் மேம்பட்ட தெய்வமெல் லாமுனது
கைபடாத் தெய்வமுளதோ
சொற்குருவு நினதுபொற் கூட்டத்தில் வந்துவெகு
தொண்டுசெய் திலிங்கவேடந்
தொடுமணித் தாழ்வடஞ் சமயநூல் வாங்காத
சுயகுருவும் வேறுமுளதோ[1]

---

1 முளரோ எனின் அமையும்.

பொற்குருவு நீசர்வ மோட்சகுரு நீயிலகு
பூதலக் குருநீயலாற்
புகல்கின்ற குருவெலாம் வேற்குரு சொறிக்குரு
பொலிதரு பலாக்குருகாண்
சற்குருக் குருவான தற்பரக் குருவுநீ!
சப்பாணி கொட்டியருளே!!
சகலகுரு வானபர சமயகோ ளரிராய!
சப்பாணி கொட்டியருளே!! 4

## வேறு

37 அருமறைத் துதிசெய நிலவொழு கியசடை
யப்பணி யொப்பாக[1]
வரவறு கிடையிடை செருகிய சிவனய
னத்திலு தித்தாடி
வருமணி யெனவர ம(ருண்)மணி யெனவளர்
புத்தமு தொப்பாகி
வரமுனி வரர்தொழ வமரர்கள் பணியமு
டித்தச டைக்காடு
மொருமுக முடனெழு சதுமுக மழகிய
பத்தும ணிக்காது
முலவிட வெ(ாருப)து கரமில கிடவிரி
மெய்ப்பொருள் வைத்தாதி
குருபர னெனவரு முதலென வருமுகில்!
கொட்டுக சப்பாணி!!
குடவ(ளை) குமுறிய திருநெலை யதிபதி!
கொட்டுக சப்பாணி!! 5

## வேறு

38 தமரக் கடலைக் கடையத் தொடர்வான்[2]
தாது தித்தாறு

---

1 யோப்பாக என்றுளது. 2 தொடாவானத என்றுளது.

சமயத் (த)திகப் பொருளற் புதகோ
ளத்தவெ னப்பூமி
யமரப் பொருமிப் பொருமித் தடநீள்
வெ(ற்)பை யெடுத்தார
வகிலத் திசையெத் திசைசுற் றிடவே
மத்தென வட்டாட
நமனைச் சருவிச் சருவிச் செலுநா
கத்தை வளைத்தாடி
நலியத் திருகிக் கடைபுத் தமுதாய்
வைத்ததி றத்தானே
குமரற் கமரர்க் கதிகத் தலைவா!
கொட்டுக சப்பாணி!
குணநிர்க் குணமுக் குணசற் குருவே!
கொட்டுக சப்பாணி! 6

## வேறு

39 அட்டகெசம் விட்டோட நெட்(டி)ர[1]வெ டுத்தோட
வட்டகிரி மட்டாடவே
யத்தர்விழி முத்தாய பச்சைமயில் மற்றம(ர)
வத்தர்மெய் யிசைசேர்வான்
முட்டுகயி லைத்தூய வெற்பையடி மட்டாக
முட்டநிமி ரச்சீறியே.
மொய்த்தணி புயத்தூ டெடுத்துருமு பெட்ப(று)
மரக்கன்முடி பத்தோடவேய்
விட்டபக ழிக்குர பச்சைமுகி லொப்பான்
விச்சுவப ரத்தீபமே
விக்கிரம செயப்பாடல் கற்றபுல வர்க்கான
மெய்ப்பொருள் கொடுத்தாளுவாய்
கொட்டமிடு பற்றுணவக் களையெடுத் தாளுவை[2]
கொட்டியருள் சப்பாணியே!!
கொற்றவர் களிப்பான ரத்தினமகு டத்தியாகி!
கொட்டியருள் சப்பாணியே!! 7

---

1 நெட்டர எனினும் அமையும். 2 தாளவை என்றுளது.

## வேறு

40 இட்டமூ லத்தில்வரு குண்டலிவி நாயக
னிணங்குநம் பொருளாகுமோ
வேத்(தி)ரிய போதச் சுவா திட்ட வாணி(யய)
னீசனும் பொருளாகுமோ
வீட்டிலகு மணிபூர கத்தின்மலர் மகள்மகா
விஷ்ணுவும் பொருளாகுமோ
விரும்பியவ னுகதத் தினிலுமை யுருத்திரன்
விளங்குநம் பொருளாகுமோ
மட்டலர்வி சுத்தியின் மகேஸ்வரி யுடன்(பு)ணர்
மகேசனும் (பொருளாகுமோ
மேலான வாக்ஞாவில் விளங்கிடுஞ் சதாசிவன்)[1]
வழங்கிடும் பொருளாகுமோ
கொட்டமிடு சமயங்க டந்தகுரு நீபொருட்
கொட்டியருள் சப்பாணியே!
குருலிங்க சங்கமப் பரசமய சிங்கமே
கொட்டியருள் சப்பாணியே !! 8

41 எறிக்கின்ற தவளவெண் டிருநீறு மிருகாதி
லிலங்கிடுந் திருவேடமு
மிணங்கிட வணிந்தருதி ராட்சமா லிகையும்விர
லெற்றியபொன் னங்குட்டமும்
வெறிக்கின்ற சிகையிலொரு பட்டுமரை தன்னிலொரு
வேடிக்கை (யு)டையபட்டும்
வேடப்பு லிப்பான குருவடிவு கொண்டினிது
விடலேயிட் டொருபணத்தை
பறிக்கின்ற பழிகார ரழியாத பொருடந்து
பரஞான வமுதருள்வரோ
பரமோன ருஞ்சுத்த பரசித்த ருஞ்சுத்த
பரபோத பரயோகருங்

1 வரி விடுபட்டுள்ளது.

குறிக்கின்ற பரசமய கோளரிக் குருநாத!
கொட்டியருள் சப்பாணியே !!
குருலிங்க சங்கமப் பரசமய சிங்கமே!
கொட்டியருள் சப்பாணியே !! 9

## வேறு

42 பகர்வதற் கரிதான வேதவே தாந்தமாய்ப்
பண்புடைய சித்தாந்தமாய்
பஞ்சாட்ச ரங்களா யெட்டெழுத் தாகியம்
பரநாத வட்டெழுத்தாய்
நிகரிலாப் ப(ங்கய) மோராறுங்[1] கடந்தவொளி
நிற்குணமு நின்மலமுமாய்
நிலமுமா யப்புமா யங்கியாய் வளியுமாய்
நின்றவெளி யாகியழியாத்
து(க)ளிலாத் தூலமாய்ச் சூக்மமாய்ச் சூக்மவதி
சூக்மமாய் மவுனமாகிச்
சொல்லற்று நின்றதா யானந்த வடிவான
சுகசொரூப வாதியாகிச்
சகளநிட் களமாகி வந்தசிவ சிங்கமே!
சப்பாணி கொட்டியருளே !!
சகலகுரு வானபர சமயகோ ளரிராய!
சப்பாணி கொட்டியருளே !! 10

சப்பாணிப் பருவம் முற்றும்.

---

1 மொளுறுங் என்றுளது.

# முத்தப் பருவம்

43 அழியுஞ் சனனப் பிறப்பிறப்பி
லழியா தாக்கி யெஞ்ஞான்று
மலங்கா மலத்தை யடக்கிவைத்து
ளாகாக் கரண மாக்(கி) வைத்திட்
டொழியும் புலனை யுள்ளிருத்திக்
கன்மப் புலனை யோட்டடக்கி
ஒன்ருய்ப் பூத மோரைந்து
மொன்ருய்க் காட்டி யுள்ளுணர்த்திப்
பொழியு மனந்தா னனந்தவெள்ள
முள்ளும் புறம்பு மூவட்டெடுப்பப்
பொருளைக் காண விசுவகுலப்
புனிதா செவிக்கோ ருபதேச
மொழியும் பவளக் கனிவாயான்
முத்தந் தருக முத்தமே!
முதல்வா சமய கோளரியே
முத்தந் தருக முத்தமே!! 1

44 வடிக்கும் பலசாத் திரப்பேய்கொண்
டுளறி யுளறி மிருந்ததர்க்க
வாத(ப்) பறைக ளறையமுன்னே
வஞ்ச மிகுந்த புகைகாட்ட
நடிக்கு மூதா டடங்காத
நாவை யடக்கிச் செவியூடு
நல்லா (ர)முதத் துளியொழுக்கு
நலமா மென்ன விதம்பகர்ந்து
படிக்கும் பலபேர் சாத்திரமுங்
கூடா வொழுக்கப் பண்புமற்றுப்
பலநூன் முறையும் பேதமிகப்
பகர்ந்த வகையும் பொருளாக

முடிக்கும் பவளக் கனிவாயான்
முத்தந் தருக முத்தமே!
முதல்வா சமய கோளரியே!
முத்தந் தருக முத்தமே!! 2

## வேறு

45 பூவார் செழுஞ்சந் தனத்தின்முத்தம்
பொருந்துங் கவாடம் வேயீன்ற
புதுமுத் தறவே வெடித்தரும்பும்
பூகத் திடையே விளைந்தமுத்தம்
காவார் குழற்பைந் திருவனையார்
கண்டத் தணிமுத் திகலுமெனக்
கணைத்துப் பணைத்த முலைக்கணியார்
கன்ன றருமுத் தொடிந்துதிரும்
தாவா வமுதத் திங்கண்முத்தஞ்
சடைபட் (ட)றவே தேயுமெறி
தரங்கக் கடல்வாய் சலஞ்சலத்திற்
றருமுத் தழுங்கித் தசைதோன்று
மூவா முதலே குறையிலைநின்
முத்தந் தருக முத்தமே!
முத்தர் பரவும் பரசமய
முகுந்தா முத்தந் தருகவே!! 3

46 சுழிவாய் தரங்கத் திப்பிமுத்துந்
துளைபட் டளைபட் டதுவிலையாஞ்
சூரத் தலைவர் புயத்துமுத்தந்
துங்கச் சரம்பட் டொளிமழுங்கும்
பொழிதேன் பிலிற்றி முகையுடைக்குங்
கஞ்சப் பொகுட்டின் புதியமுத்தம்
பொருந்தும் பழனச் சேறழுந்தும்
பொலியுஞ் சாலி விளைந்தமுத்த

மழியும் படைக்கூன் வாள்பூட்டி
யரிவாம் பணீல மணிமுத்தம்
பொற்ற கட்டாற் கட்டுண்ணு
மகிலத் தலத்தி லொருகுறையு
மொழியா முத்த முனதுசெவ்வாய்
முத்தந் தருக முத்தமே!
முத்தர் பரவும் பரசமய
முகுந்தா முத்தந் தருகவே!! 4

## வேறு

47 கொடியிடை யிடைச்சியர்கள் கலகவிழி தப்பியிரு
குடிலமைய விட்டபடல்சேர்
கொளுவியத டித்தலையை யுருவியவெ ளிக்குளுடல்
குழையமடி யிட்டுலவியே
துடியெனுமி டைப்பெரிய வடியுநர லடுக்கிவளர்
துணையடிமி தித்தரையினீ
டுவளிடவொ லிக்குமணி மணியொருகை
(சு)ழிவயிறை யெக்கிநிரைசூழ்
நெடியமுக டிறக்கவிழு முறியவிழ வெட்டியதின்
நிறைதயிரை யப்பிமணிவாய்
நிறை(ற)ய(வு)ள முக்கியடி யிதழ்மலர சுவைத்துநறு
நெ(ய்)யிலொரு கையிட்டபுயலே
படிமிசைவ ழுத்துபர சமயசிவ சித்தசிறு
பவளவிதழ் முத்தமருளே!
பரவெளி யுள்வட்ட மெழுமணியி லுதித்தமணி
பவளவிதழ் முத்தமருளே!! 5

48 வடவரைந டுங்கிநெடு முடியசைய வட்டகச
மதமழை யொடுங்கவளையூர
மறிகடலு டுத்தபுவி திசைதிசை[1] யதிர்ப்பவுயர்
மலிககன மொத்தசையவே

---

1 திசைதிச என்றுளது.

சுடர்கிரணம் வைத்துவிரி கதிர்களு மொடுக்கமதி
சுழலவுடு வற்றுவிழவே
தொழுமவுனர் சித்தர்முனி வரரதிக வித்யதரர்
சொலுமமர ரச்சமுறவே
தடமுடி துளக்கவிரு குழையணி யசைப்பவிரு[1]
சிறுவிழி சிவப்பநுவல்வோர்[2]
தரவொருகை சக்கரமும் வளையொருகை யுகரமிக
வொருசர ணெடுத்துரகநீள்
படநெறிய நிர்த்தமிடு பரசமய முக்கடவுள்
பவளவிதழ் முத்தமருளே !
பரவெளியுள் வட்டமெழு மணியினிலு தித்தமணி
பவளவிதழ் முத்தமருளே !! 6

## வேறு

49 வடிவி லிருக்கு மொருவடிவே !
மனத்து ளிருக்கு மறிவறிவே !
மறையி லிருக்கு முட்பொருளே !
மணத்தி லிருக்கு மறுமணமே !
நடுவி லிருக்குஞ் சுழுமுனையே !
நாட்டத் திருக்கும் ரகசியமே !
நாதத் திருக்கு மதிசயமே !
நாவி லிருக்கும் புதுச்சுவையே !
குடியி லிருக்குந் தத்துவமே !
குணத்தி லிருக்கும் நிர்க்குணமே !
குறிக்குங் கருவி னுட்கருவே !
குறியா திருக்கு மனுபூதி !
முடிவி லிருக்கு மெஞ்ஞான
முதல்வா ! முத்தந் தருகவே !
முத்தர் பரவும் பரசமய
முத்தே முத்தந் தருவே !! 7

1 யசைபபவிறு என்றுளது. 2 நுவல்வேர என்றுளது.

50 கொத்துத் திரண்ட பலநாடிக்
கூட்டத் திருக்குந் தசநாடிக்
குழுவிற் சிறந்த விடைபிங்கலைக்
கொடியிற் சிறந்த சுழுமுனையு
டத்திக் கலந்த மூலவழ
லழலைக் கரந்த ரேசகத்தா
லாட்டிக் கொளுவிப் பூரகத்தா
லடக்கி யடக்கிக் கும்பித்துத்
தித்தித் திருந்த வமுதமுண்டு
தேக்கித் தேக்கித் தனைமறந்து
தெரியா நின்ற திருக்கூத்தைத்
தெரிசிப் பவனு மவனுன
முத்திக் கொருவித் தாயமுழு
முதலே முத்தந் தருகவே!
முத்தர் பரவும் பரசமய
முத்தே முத்தந் தருகவே! 8

51 சத்த மெழுந்த தலமுமந்த
தலத்துற் பவித்த குறியும்விந்து
தன்னை யறியாக் குணங்களின்பின்
தன்னை யறிந்த (சி)த்தறிவுஞ்
சித்த மிகுந்த விடமுமந்தச்
சித்த வடிவு மூலத்திற்
றீத்தா னிருந்த நெறியுமந்தத்
தீத்தா னெருத்தன் மூட்டினதும்
பூத்தி யிருந்த வறையுமந்தப்
பூத்தி மயங்கி யொடுங்கினதும்
பொருளைத் தேடி மலைந்ததுவும்
பொருளாய்த் தானே முடிந்துநின்ற
முத்தி முதலு மெனக்கறிய
மொழிவாய் முத்தந் தருகவே!
முத்தர் பரவும் பரசமய
முத்தே முத்தந் தருகவே!! 9

முத்தப்பருவ முற்றியது.

# வருகைப் பருவம்

52 விரிந்த புவனம் பதினாலும்
விரிநீ(ர்க் க)டல்க ளோரேழும்
விளங்குங் குடுமிப் பொலன்சிகர
வெற்போ ரெட்டுந் திசையெட்டும்
பரந்த முனிவ ருரைக்கடங்காப்
பல்லா யிரவான் கோடியண்டப்
பரப்பு முதிய பழமறையும்
பல்சாத் திரமும் பெருநூலு
நிரத்த சமய மாறாறு
நிகழாச் சமய மளவைசெய்யா
நின்ற பலவு மளவளவாய்
நிறைந்த பொருளுஞ் சராசரமுங்
கரந்தோ ருருவாய் நிறைந்துநின்ற
கள்வா வருக வருகவே!
கருணைக் கடலே பரசமயக்
களிறே வருக வருகவே!! 1

## வேறு

53 தேறாத சனனங் குறிப்பவரை மாறாத
தீயினி லமிழ்த்து வார்போற்
சிவனஞ்செ ழுத்தென்று செத்தெழுத் தஞ்சையிரு
செவியதனில் முணுமுணுத்துக்[1]
கூறாத கடவுளுக் கில்லாத நாமங்கள்
கூறியுயிர் பேதபேதங்
கூறியறு சமயமுங் கூறுநெறி யில்லாக்
குருப்பேய்க ளோத்துதித்துப்
பாராம லடியவர்க் கானந்த போதச்சு
கானந்த மோனத்தையே
பாலித்து நீலத்தி ரோதத்தை மாற்றிப்
பார்சுத்த தீதத்திலே

---

1 மிணுமிணுத்துக் என்றுளது.

மாருமல் வைத்தபர சமயகோ ளரிதந்த
மானகே சரிவருகவே !
வல்லமை சொல்லுநெல் லைநகர் வளரல்லி
வல்லியணி புயன்வருகவே !! 2

## வேறு

54 சொல்விற் பனத்தா லரசராச்
கூட்சி களவால் வேடமிட்டு
துலுக்கும் பொலிவா லுபதேசத்
துன்பஞ் செவியின் முணுமுணுத்துச்[1]
செல்வக் கனகப் பொருள்கவருந்
திருட்டுக் குருக்க ணளிக்குறும்பைச்
சினத்தை யொடுக்கும் பரசமயச்
சிங்கக் குருவே மும்மலத்தை
வெல்விக் கிரமா முப்பொருளின்
விளைவாய் வளையா யிரந்தொட்டு
மேலா தார வீட்டினுக்கு
மேலாய் விளங்கு மெய்ஞ்ஞான
கல்விக் கரசே (நெ)ல்லைவளங்
காக்குந் தலைவா வருகவே !
கருணைக் கடலே பரசமயக்
களிறே வருக வருகவே !! 3

## வேறு

55 கோவே வருக மறைக்கடங்காக்
குருவே வருக விசுவகுலக்
குன்றே வருக நாதாந்தக்
கொழுந்தே வருக பிரணவத்தின்
பூவே வருக நவகோணப்
பொருளே வருக சிவநிறைந்த
பொறையே வருக வறிவறியும்
பொன்னே வருக புகழ்பூத்த

1 மிணுமிணுததுச என்றுளது.

க(ா)வே வருக பிறப்பறுக்குங்
க(ண்)ணு வருக மூவுருவங்
கரந்தாய் வருக நிரந்தரிக்குங்
கள்வா வருக வெப்பொருட்குந்
தேவே வருக பரசமயச்
சிங்கப் பெருமாள் வருகவே !
செல்வக் களிறே நெல்வேலித்
திருமால் வருக வருகவே !! 4

## வேறு

56 ஓராயி ரங்கோடி சந்திரகலை யெனவீசு
முனதுமுக மண்டலத்தி
னொளிகண்ட பொழுதிலே சஞ்சிதக் கட்டறுநி
னுபயவிழி கண்டபொழுதிற்
பாராம (ல)ாகாமி யத்தொடு பிராரத்வ
பழவினைத் துன்பமாமே
பவளவாய் மலர்கண்ட பொழுதிலே மாருத
பாவங்களை மாயுமொருக்காற்
றீராத சனனமர ணப்பிணப் புடைபடுஞ்
சிகரத்த பரிசமுறிலோ
சிவனவ னெனப்பெறுஞ் சாரூப சாயுச்சிய
செல்வமுந் தருமெங்கண்முன்
வாராத வெ(துன்கொ)ல்பர சமயகோ ளரிதந்த
மானகே சரிவருகவே !
வல்லசது மறைசொல்லு நெல்லைநகர் வளரல்லி
வல்லியணி புயன்வருகவே !! 5

## வேறு

57 அரியுமா யவனிகரு முதலுமா யரிவைபுண
ரரணு[1] மரன்வருகவே
யலவினுன் மறையுமுனி வரருநா டரியவொரு
வமலநா யகன்வருகவே

---

1 = ?

விரியுமா நிலமற லவ்வெரி யருவளி
யருவவெளியு மரன்வருகவே
விகடமா மலமுமிரு கபடநா டகமனமும்
விடுமஞ்ஞெ மயன்வருகவே
யெரியகா ரியமும்வள ருரியகா ரணமுமிகு
பிரளயமா னவன்வருகவே
பெருகுபூ தலமெவையு முளசரா சரமுநிறை
பிரணவமா னவன்வருகவே
தரியலார் புரமெரிய நகையினு லழலை(விடு)
சமரநா யகன்வருகவே!
செகமெலா மகிழவருள் பெருகுகா ரணிகபர
சமயகோ ளரிவருகவே!! 6

58 மூலத்து வாரத்தை மேலிட்டு மேல்கதி
மூடிக்கெ டாமல்விட்ட
மோனக்க லாவிட்ட வாசிக்கு ணேசத்தை
மோசித்து மாசித்தமாய்
மேலைத்து வாரத்தி லீரெட்டு மேறிட்டு
வீழிட்ட நாலெட்டுமே
வீசிக்க லாமத்திய நாளத்தி னோர்சித்ர
வீடத்தி மேல்வட்டமே
நாலெட்டு மோரெட்டு மாறெட்டு மீரெட்டு
நாடிப்பிற வாவெழுத்தி
ஞல்வைக்க நீயற்று நானற்று வாழ்வுற்ற
ஞானத்தை யேயளிக்கு
மாலொத்த (வ)ாபக்க மாமுத்தர் சேவிக்க[1]
வாழ்வுற்ற வாவருகவே!
மாவிஷ்ணு பாவிக்க வோ(ர்சக்ரர்) நேசிக்கு
மாணிக்க மேவருகவே!! 7

---

1 செவிகக என்றுளது.

## வேறு

59 தண்டா மரைசூழ் நெல்வேலி
தழைத்தாய் வரு(க தமிழ்)க்குதவுந்
தருவே வருக வைந்துமுகத்
தானே வருக விசுவமுருக்
கொண்டாய் வருக பலவேடங்
கொண்டாய் வருக (கூ)த்தாடல்
கொண்டாய் வருக வென்னையுமாட்
கொண்டாய் வருக யுரவுமுன்போற்
கண்டாய் வருக பார்க்கிலுன்னைக்
காணுய் வருக (சுக)சொரூபக்
கனியே வருக கனிகனிந்த
கமழ்வே வருக வசோதைமுன்னே
திண்டா டியமால் பரசமய
சிங்கப் பெருமாள் வருகவே !
செல்வக் களிறே நெல்வேலித்
திருமால் வருக வருகவே !! 8

## வேறு

60 கல்லைத் தொழுது மனத்தானுங்
கல்லாய்த் திரிந்து தகர்த்தடித்துக்
கருவைக் காய்ச்சி யுருக்கிவிட்ட
களிம்புச் செம்பைத் தொழுதுவம்பாய்த்
தொல்லைப் புவனமெ லாந்திரிந்து
(திளைத்துப்)[1] பலமந் திரஞ்செபித்துத்
தோல்வா யாதி யாலயத்தைச்
சுற்றிச் சுழன்று காலோய்ந்து
சல்லிச் சமய விடந்தீண்டத்
தலைகொண் டருட்கண் ணறமூடித்
தன்னை மறந்து மாயாமற்
சகல பாச மறுத்தாண்ட

---

1 இச்சீர் விடுபட்டுள்ளது.

மல்லற் குருவே பரசமய
வரதா வருக வருகவே!
மறையோர் வழுத்து நெல்வேலி
வாழ்வே வருக வருகவே!! 9

61 இறப்பும் பிறப்பு மிருவினையு
மிசைந்த பதமு நரைமூப்பு
மிளமை வளமைப் பெரும்பிணியு
மிச்சை விரதங் கொலைகளவுஞ்
சிறப்புங் கவலைப் படுமடிவுஞ்
சிறுமை பெருமை செம்மாப்புந்
திருட்டு மருட்டு முருட்டும்வஞ்சஞ்
செறிந்த விருப்பு மிகுமனமும்
பறப்பும் பரப்பு நடுக்க(மொ)டு
பகையுஞ் சிறையு மகந்தைகளும்
பழநூன் மதமுஞ் சத்தியமும்
பாராட் டுடனே சீராட்டு
மறப்பு (மொரு)கூட் டினிலடைத்தே
மயக்குந் தலைவா வருகவே!
(வ)ரதா நெல்லைப் பரசமய
வாழ்வே வருக வருகவே!! 10

## வேறு

62 சித்தும சித்து மொன்றாக்கித்
தெளிவு மயக்கு மொன்றாக்கிச்
சிவமும் பசுவு மொன்றாக்கித்
தினையு மலையு மொன்றாக்கி
யொத்து முடியாப் பூதங்க
ளைந்தைப் பிரியா தொன்றாக்கி
யுகமுந் தினமு மொன்றாக்கி
யுறவும் பகையு மொன்றாக்கி

சத்தும சித்து மொன்ருக்கிச்
சடமு முயிறு மொன்ருக்கித்
தவமு மவமு மொன்ருக்கித்
தன்னை யென்னை யொன்ருக்கி
மத்த மகன்ற வனுபூதி
வழங்குந் தலைவா வருகவே!
வரதா நெல்லைப் பரசமய
வாழ்வே வருக வருகவே!! 11

வருகைப்பருவம் முற்றியது.

# அம்புலிப் பருவம்

63 நீதமாம் வானப் பதிய துண்டுனக்கு
நீள்பதியுண் டிவன்றனக்கு
நிகழ்தருங் கிரண வமுத முண்டுனக்கு
நிறையமுதுண் டிவன்றனக்குச்
சூதிலா வுயர்ந்த கலைய துண்டுனக்குச்
சொற்கலையுண் டிவன்றனக்குத்
துலங்கிய சோதி யுண்டு னக்கழியாச்
சோதியேயுண் டிவன்றனக்கு
மேதகு பரிவே டங்க ளுண்டுனக்கு
மிக்க(சட்ச)மய மேபுரக்கும்
வேதமுண் டின்னேன் றனக்கு நாடோறு
மேன்மைசீர் தூக்கி யேபார்க்கி
ஞதலா லிருவ ரியற்கையுஞ் சரிகா
ணம்புலீ யாடவாவே!
அனவரத பரசமய திமிரதின கரனுட
னம்புலீ யாடவாவே!! 1

64 நித்தமே நீகொண்ட கோலமே குறையுமிவ
னின்றகுரு[1] வடிவுவளரு
நித்தமு முதித்துநீ யொடுங்(கு)வை யிவன்கொலோ
நிலைகொளா துதித்தோடுங்காண்
மத்திம களங்கனீ மாறுத வகளங்க
வடிவனிவ னுரகனுடனே
வைக்கச் சடைப்பட்ட தேகனீ யிவன்ஞான
மத்தப்பிர மத்தனுமே
யொத்தசக தண்டத்தை வலம்வந்து ம(லமந்த)
தொளியா தொடுங்கிவிட்டா
யுணர்மூல சகதண்ட பரமகோ ததிமூழ்கி
யொளியமல னுகிநின்றாய்

1 னிண்ட என்றுளது: னீண்ட எனினும் அமையும்.

யத்தனென வரு(நித்)த நித்தியகல் யாணனுட
னம்புலீ யாடவாவே!
அனவரத பரசமய திமிரதின கரனுட
னம்புலீ யாடவாவே!! 2

65 சகமீதி (லுன்)போல வா(ரு)று செவ்விதழ்த்
தாமரைய லர்த்தல்செய்வையோ
சந்ததமு மாணவத் திருடோ(டி)த் தொளியாத்
தண்கலேப் பரத்தல்செய்வையோ
புகலாதி வன்போல மாருமை லுள்ளும்
புறம்பும் வெளுப்பாவையோ
புத்தமுத ருட்கண் டிறந்துதிரி புவனமும்
பொ(லி)வுறத் தோன்றல்செய்வையோ
மகமாயை யைக்களைந் திரவியாத வன்முரணை
மாற்றிக்க டந்தருள்வையோ
வருகின்ற கோளரா வுடலைநெற நெறநெறெனை
மத்தித்தி றுக்குவாயோ
வகமகிழ்ந் திகலாமல் வருவிசுவ தீபனுட
னம்புலீ யாடவாவே!
அனவரத பரசமய திமிரதின கரனுட
னம்புலீ யாடவாவே!! 3

## வேறு

66 மதியாமல் வாய்கொண்டு துதியாமல் வந்ததொரு
வாயுளா னைத்தொடர்ந்து
மாநாடகங்கொண்டு திறல்கொண்டு திறைகொண்ட
மகிமையை யறிந்திலாயோ
கதிராயி ரங்கொண்ட சூரியனை யோட்டிக்
கடைந்ததை யறிந்திலாயோ
கலைமுனியை மலையிற் கொடுஞ்சிறையில் வைத்ததிரு
கண்ணுறக் கண்டிலாயோ

விதியாலு மழியாத தரணியன் றலைபட்ட
பாட்டையு மவன்சுகித்த
மெய்பட்ட பாட்டையு மறிவைநீ யறியாது
வேறில்லை (யி)ல்(லை)கண்டா
யதிராவ ரம்பெற்ற விசுவகுல திலதனுட
னம்புலீ யாவடாவே!
அம்புவிதொ ழுஞ்சமய சிங்கமுட னம்பிநீ
யம்புலீ யாடவாவே!! 4

67 பண்டைநான் முகனுமறி யாதவே தாந்தமும்
பகர்தருஞ் சித்தாந்தமும்
பண்புடைய வெண்ணெண் கலாந்தமுஞ் சுழிமுனைப்
பற்றியநன் ஞுதாந்தமும்
விண்டசங் கோசையெழ நின்றபோ தாந்தமும்
விருப்புடைய கரணுந்தமும்
வெளி(யி)ற் கரந்தவொளி யெனவொன்றி
யொன்றுபதி
மேலாம்ப ராதீதமாய்க்
கொண்டிடும் வெளிப்பாழ் சிவப்பாழ் பரப்பாழ்
குறிக்குமுப் பாழுமாறி
குறியற்று நிலையற்று வறிவற்று வடிவற்ற
கோதிலா ஞானேதய
வண்டங்க டந்துநின் ருடுகுரு நாதனுட
னம்புலீ யாடவாவே!
அம்புவிதொ ழுஞ்சமய சிங்கமுட னம்பிநீ
யம்புலீ யாடவாவே!! 5

68 பேதியா மலம்விட் டடைத்தமா மாயப்
பிரபந்தக் கொடும்புந்தியுட்
பேராத பிரமம்பிர வேசித்த மூலப்
பெருங்கன லெழுப்பவலராச்

சீதார (வி)ந்தமுகை யிடம்வலம தாகவுஞ்
செய்துநா ருறறுபதுஞ்
செய்துசெய் தங்ஙென்று கும்பித்து நடுவான
சித்திரச் சுழிநாடியூ
டோதாவெ ழுந்தேறு மிடைபிங்க லேக்கலைகொ
டூரப்ப ரந்தகால
வொளிவிந்து நாதநா தாந்தவட் டத்துச்சி
யூடுருவ நின்றசோதி
யாதார விசுவமென வந்தநா யகனுட
னம்புலீ யாடவாவே!
அரியயனு மருவுபர சமயகோ ளரியுட
னம்புலீ யாடவாவே!! 6

## வேறு

69 வேதனைப் படுதுக்க செனனசா கரமூழ்கி
வீழாம லடுசோள்களு[1]
மேலிட்டு நடியாம லொருகுறையு மில்லாமல்
மெய்க்களங் கில்லாமலே
கோதிலா ஞானவா னந்தமு தக்கலைகள்
குறையாம லினிதானவன்
குருசம்பிர தாயமிவ னுக்குவரு மிவன்வினைக்
கோளரிக் கின்றவரிகாண்
(பூ)தலத் துயிரெலா மிவனிடமொ டுக்கம்
(புத்திதரு ஞானசத்தி
பெருகவே படைக்கின்ற பெரியகிரி யாசத்தி)[2]
பொருந்துமிச் சாசத்தியோ
டாதிசத் திக்குமொரு தலைவனிவ னீமகிழ்ந்
(த)ம்புலீ யாடவாவே!
யமலவடி வானபர சமயகோ ளரியுட
னம்புலீ யாடவாவே!! 7

---

1 லடுதோள்களு எனல் பொருந்தும். 2 இவ்வரி சுவடியில் இல்லை.

## வேறு

70 சமரம் பரிபுர மெரியும் படி(மிக)[1]
நகைத்த) பராபரனுர்
சகரன் ஞெடுகட லுலகெங் கணுமொரு
தம்பதி ராமயனுர்
குமரன் கரிமுகன் முதலம் பரர்முறை
கும்பிடு சேனையினுர்
குருசங் கரரொடு நயனந் தரவரு
கொண்டல் மருதகைமால்
விமலன் பசுபதி யறியுங் குருபரன்
வென்றிம ஞேகரன்மால்
விடையன் பிறைமுடி சடையன் பலகலை
விஞ்சைவ ரோதயன்வீ
றமலன் றிருநெலை நகர்வந் தவனுட
னம்புலி யாடுகவே!
அகிலந் தொழுபர சமயன் பிரியமுற
வம்புலி யாடுகவே!! 8

71 மறியுங் கொலைநிமிர் மழுவுங் கரமிசை
கொண்டபு ராரியணீள்
வடிவுங் குணமிகு குறியுஞ் சொலவரி
தானக ளாகபனேர்
பொடியையம் புலன்வகை வகையுங் கரணமும்
வென்றிநி ராதரன்வாழ்
புறமுங் குறைவற வகமுஞ் செகமுநி
றைந்தம கோததியா
னெறிகொண் டருமறை பரவும் பழமைய
னேந்தவ மானவன்யா
வினையும் பொழு(து)முன் வருமன் பினனிரு
கண்புகு தரவொளியா

1 இச்சீர் சுவடியில் இல்லை.

மறிவன் றிருநெலை நகர்வந் தவனுட
னம்புலி யாடுகவே!
அகிலந் தொழுபர சமயன் பிரியமுற
வம்புலி யாடுகவே!! 9

## வேறு

72 நெஞ்சாரு நினைவின்றி யெட்டிரண் டோசையெழ
நின்றமவு னந்தவிதையு
ணிறைகொண்ட மனமுளைமு ளைத்துக்கொ ழுந்தாகி
நித்தியக் கவடுவிட்டு
மஞ்சாரு மாணவக் குழைதழை தழைத்துமும்
மண்டலச் சுனைகள்பூத்து
வளருமா ருதார மலிதருஞ் சுண்ணம்
பிதிர்ந்துவரு மஞ்செழுத்தும்
பிஞ்சாகி மாமாயை காய்த்துச்சி வீரெனப்
பிரணவக் களிபழுத்துப்
பேதாதி பேதமற நின்றநறை யொழுகிய
பிரஜைமெய்க் கடவுளானே
னஞ்சாகி யாறுசம யங்கடந் தானுட
னம்புலீ யாடவாவே!
அனவரத பரசமய திமிரதின கரனுட
னம்புலீ யாடவாவே!! 10

அம்புலிப் பருவம் முற்றியது.

# சிற்றில் பருவம்

73 கல்விப் பயனே நவரசமுங்
கனிந்த கனியே தனிச்சுடரே!
காலாய் மேலாய் நிறைந்தவண்மைக்
கருணைக் கடலே யெட்டெழுத்தே
வல்வித் தாணுய் விளைவித்தை
முளையா வண்ணங் கருக்கெடுக்க
வந்த வெயிலே யருண்மாரி
வழங்கும் புயலே யெழுங்காலே
சொல்விற் பனமே கலைக்ஞானச்
சுகமே யாறு சுவைப்பயனே
சுருதிப் பொருளே சுத்தசத்தாய்த்
தோன்றுந் தவமே செழுங்கமலச்
செல்விக் கிறைவா வாகண்ட
தீபா சிற்றில் சிதையேலே!
செல்வா சமய கோளரியே
சிறியேன் சிற்றில் சிதையேலே!! 1

74 இருக்கு மாறு சாத்திரனூ
லெல்லா மறியாப் பொருணீபெற்
றிகலே படைத்து முனிவருக்கு
மிமையோர் தமக்கு மேலாகிப்
பெருக்குங் கமலக் குண்டலிப்பெண்
வீட்டை யளித்தாய் நாமடந்தை
பெரிய வீட்டைக் கால்கொண்டு
பிரிய வளித்தாய் திருமடந்தை
நெருக்குங் கனக வீடளித்தாய்
நினைவா யிருந்த வுமைவீட்டை
நினைவி னளித்தாய் மனோன்மணிப்பொன்
னிறையுங் கருணை வீடளிக்குஞ்

செருக்கன செருக்க னம்மம்ம
சிறியேன் சிற்றில் சிதையேலே!
செல்வா சமய கோளரியே
சிறியேன் சிற்றில் சிதையேலே!! 2

75 வைய மனைத்தும் புகழ்நிறுத்த
வருமா முகிலே யடியவர்க்கு
வாழ்வு பெருக்க நெறிதழைக்க
வந்த பொருளே யிருவினையை
நைய நறுக்கும் பெலக்களிறே
ஞானத் தலைவா கரணமொரு
நான்கு மமையாப் புலனைந்து
நகர மாறு மெழுமணியே
பொய்யை மறைத்த மெய்யுருவே
புத்தா ரமுதே யருமணமே
புனிதர் பரவு முபநிடதம்
புகலும் பயனுக் கெட்டாத
செய்ய மலர்த்தாள் சிவக்காதோ
சிறியேன் சிற்றில் சிதையேலே!
செல்வா சமய கோளரியே
சிறியேன் சிற்றில் சிதையேலே!! 3

## வேறு

76 உருவம் படைத்துப் பல்லுயிரு
மொக்கப் படைத்தொன் றழியாதே
உலகம் படைத்தாய் பேராழி
யொக்கப் படைத்தா யொழியாதே
பருவம் படைக்கு மாகண்டப்
பரப்பும் படைத்தா யழியாதே
பச்சைக் கவுரி தாளமொத்த
சங்கத் தொனியம் பரமுழங்க

மருவும் பழைய முனிவர்குழாந்
துதிப்ப மழுமான் கரத்தாட
மணிவார் சடையிற் பிறையாட
மலர்த்தா டூக்கித் தொந்தாமெனத்
திருவம் பலத்தி னடம்புரியுந்
தேவா சிற்றில் சிதையேலே!
சிவமாய் நிறைந்த பரசமயச்
சிறுவா சிற்றில் சிதையேலே!! 4

## வேறு

77 மூவா முதலுக் கழியாத
முத்த வெளியின் றிரள்வரைக்கான்
முகண்டின் வளையும் புதியவெள்ளி
மொய்ப்பூ ணிடமுங் கண்ணனுக்குப்
பாவால் வளைசேர் பாலாழிப்
பழைய பதியும் விரிஞ்சனுக்குப்
பரிக்கு மறுகா லுயர்ந்தவரிப்
படியுங் கபாட விதழ்திறந்த
தாவா மலர்மென் மாளிகையுந்
தக்க வானோர் வேந்தனுக்குந்
தங்கத் தனிமா நகருமுன்னைத்
தயவாய் வணங்கு முனிவருக்குந்
தேவா திபர்க்கும் பதிகொடுத்தாய்
சிறியேன் சிற்றில் சிதையேலே!
சிவமாய் நிறைந்த கோளரியே
சிறியேன் சிற்றில் சிதையேலே!! 5

78 மருத்தா மரைப்பூந் திருவனையார்
வஞ்சிக் கொடியார் கடலளித்த
மணிமுத் தெடுத்துத் தரம்பிரித்து
வாரி வாரிச் செங்கைகொடு

கருத்தால் வகுத்த மனையரங்கும்
வயிடூ ரியத்தாற் கனமதிலுங்
கதிர்விட் டெறிக்கும் வயிரமணிக்
கதவும் பவளத் தூணிலையும்
பொருந்தா நவகாந் தியையெறிக்குங்
கோமே தகத்தாற்[1] பொலிவுதரப்
புகழ்ந்து புகழ்ந்து[2] விளையாடும்
பொன்மா மனையு நேற்றொருகாற்
றிருத்தாள் சிவப்ப வழித்தனை நீ
சிறியேன் சிற்றில் சிதையேலே!
செல்வந் தழைக்கும் பரசமயத்
திலகா சிற்றில் சிதையேலே!! 6

## வேறு

79 மருட்பே யனைய சாத்திரப்பேய்
வளரா ணவப்பேய் காமப்பேய்
வாது புரியுந் தர்க்கப்பேய்
மறையா நெஞ்ச வஞ்சகப்பேய்
பொருட்பேய் கள்ளப் பூசைப்பேய்
பூசித் திரியும் நீற்றுப்பேய்
பொட்டா யிருந்த வேடப்பேய்
புலம்பித் திரியு மந்திரப்பேய்
குருப்பேய் பிடித்து மமதைவெறி
குமட்டிக் குமட்டி மேலிட்ட
கோலக் குருக்கண் மேலிந்திர
சாலக் குருக்கண் மதமடக்கித்
திருப்பேர் தழைக்கும் பரசமயச்
செல்வா சிற்றில் சிதையலே!
திருமால் நெல்லைப் பதிவேந்தே
சிறியேன் சிற்றில் சிதையேலே!! 7

---

1 தகததாள என்றுளது. 2 புனைந்து, புனைந்து எனல் பொருந்தும்.

80 சொல்லுஞ் சுருதி யானலவோ
சொற்பா ரிடமும் யானலவோ
சூழுங் கிரியும் யானலவோ
தொடுநீர்க் கடலும் யானலவோ
வல்லும் பகலும் யானலவோ
வழலும் வெளியும் யானலவோ
வன்ன மயமும் யானலவோ
வாறு சுவையும் யானலவோ
கொல்லுந் தொழிலும் யானலவோ
குறியா வுலகி னீகொண்ட
குருக்கோ லமும்யா னல்லாமற்
கோல முனக்கே நீகுறித்துச்
செல்லுந் தலமும் யானுமே
சிறியேன் சிற்றில் சிதையேலே!
சிவமே சமய கோளரியே
சிறியேன் சிற்றில் சிதையேலே!! 8

81 அரியு மயனு மாயேனை
யன்றி யுளதோ கண்ணையல்லா
லண்ட முளதோ களியையன்றி
யதனு ளிரசம் பிரிந்திடுமோ
சொரியு முகிலை யன்றியொரு
துளிநீ ருளதோ தாயையன்றிச்
சொல்லுங் குழவி யுண்டாமோ
சொர்ணம் வேறு பணிவேறோ
விரியுங் கதிரோ னில்லா(ம)ல்
வீட்டு விளங்கும்[1] கிரணமுண்டோ
மெய்ம்மை விளக்கும் பாசமன்றி
யுண்டோ பதிதான் மெய்தேடித்
தெரியுங் காலை யானீதான்[2]
சிறியேன் சிற்றில் சிதையேலே!
சிவமே சமய கோளரியே
சிறியேன் சிற்றில் சிதையேலே!! 9

---

1 விளகுகங என்றுளது. 2 காலா லேநீதான் எனல் பொருந்தும்

82 நாட்டங் கொண்டு நீசுட்ட
ஞானக் கிளியுந் தேருங்கா
னுஞ் சொல்லுக் கெட்டாத
ஞானோ தயமு நானுமே
கூட்டங் கொண்ட வாதாரக்
குடியுங் குணமு நானுமக்
குடிலை யமைத்துப் பரவெளியைக்
குறிக்கு மனமு நானுமே
வேட்டங் கொண்ட சத்தசத்தை
விளக்குங் குருவு நானுமவ்
வெறும்பா ழிடத்தி லானந்த
மேலா கீத நானுமே
தேட்டங் கொண்ட குருநாதா
சிறியேன் சிற்றில் சிதையேலே!
சிவமே சமய கோளரியே
சிறியேன் சிற்றில் சிதையேலே!! 10

சிற்றில் பருவம் முற்றியது.

## சிறுபறைப் பருவம்

83 கொலைவளைக் குங்கொடுங் கள்ளக் கொழுந்தியக்
கொழுந்துப் பகுவாய்விடங்
கொப்பளிக்[1] கும்பொறித் துத்திப்ப ணமுடி
க்காகோ தரங்கல்லை[2]
வலைவளைக் குந்தடக் குண்டகட் டிமிரமை
மகோததிப் புடைசிவப்ப
வருவரை யெனப்பெரிய பருவரைய முத்துமிரு
புயவரை யடங்காதமா
மலைவளைக் குங்கவிக் குலவரைசு கொண்டிட்ட
வரையையொரு விரல்வரையினல்
வாங்கியணை கண்டவுன் கொடியளித் தமராடு
மருவலார் கொடியில்வீழச்
சிலைவலைக் கொண்டறு னிதவிரக் குங்குரிசில்
சிறுபறை முழக்கியருளே!
செகமணக் கும்பெரிய புகழ்நிறுத் துந்தலைவா
சிறுபறை முழக்கியருளே!! 1

### வேறு

84 மகதரொட் டியர்சீனர் துளுவர்பப் பாரீழர்
வலியகட் கருநாடர்போர்
மருவுகுச் சலரேறு குண்டரத் தனர்கோவை
வடதுலுக் கடல்வேலினர்
குகுதரச் சையர்வேறு நிடதரொட் டியர்மீறு
கடகரெத் திசைவாழ்குவோர்
குருவெனப் பரமான சிவமெனப் பணியாதி
குருவெனத் தொழுநீதனே
ச(கத)லப் பிரபுடீக மதுரசொற் கவிராச
சமுகசற் பனர்பராவுஞ்
சகுரவிற் பனதீர வதுலசற் குணரய
தனதனைப் பொருதீரனே

---

1 கொபபுளிக என்றுளது. 2 இச்சீர்கள் சரியில்லை.

செகதலக் குருவான விசுவசற் குலதீப
சிறுபறை முழக்கியருளே!
திருநெலைப் பதிமேவு சமயசற் குருநாத
சிறுபறை முழக்கியருளே! 2

85 தவமறைக் கமையாத பொருளெனத் தவர்தேடு
தமனியத் தொளியானவர்
சகளநிட் களமாகி சிவபதத் தவனை
சமர்த்(த பர)போகமே
உவமையிட் டறியாத வடகிரித் தலைவாவென்
னுமையவட் கிறையானவா
வொளியெனச் சிவயோக வெளியெனப் புகலாத
வுருவெனப் பொலிவானவா
வவரவர்க் களவாகி யணுவினுக் கணுவாகி
யளவிடற் கரிதானவா
வ(ணு)குறிக் கமையாத பரமமுக் குணமாகி
யறிவினுக் கறிவானவா
சிவசிவப் பிரகாச விசுவசற் குலதீப
சிறுபறை முழக்கியருளே!
திருநெலைப் பதிமேவு சமயசற் குருநாத
சிறுபறை முழக்கியருளே!! 3

## வேறு

86 ககனமுக டெட்டிவிரி திசைகளை நிரப்பியெழு
கடலிடை பரப்பிவிறல்சேர்
கடகரி தழைக்குமறு வரைமுடிக ளற்றுவளர்
கவிநில நிறுத்துபுகழோய்
முகமலர் விரித்துநவ வசனவுசி தத்தமுத
முதல்பெற வளிக்குமுதல்வா
முறைமுறை யடுத்துவரு மவரவர் கருத்தின்விழி
முதுவறிவு ணர்த்துமுரவோய்

மகிமைதரு முத்தமிழி னருமை(ய)றி வுத்தமவின்
மதனழகி னுக்குமழகா
வறுமைதவி ரப்பொலிவி னிதியுதவு கைக்குமிணர்
மணியணி யழுத்துபுயனே
செகதலம வழுத்துமருள் பெருகுகரு ணைத்தலைவ
சிறுபறை முழக்கியருளே!
தினகரன் மணிக்கதிர்கள் சிதரிட வடர்த்தழுகில்
சிறுபறை முழக்கியருளே!! 4

## வேறு

87 முப்பத்து முக்கோடி தேவரா லறியாத
மூலக் கனற்கொழுந்தை
மூடித் திறந்திடா மனமாயை யைத்தள்ளி
முத்திச் சுடர்க்கொழுந்தா
லப்பைத் திறந்துநில மதனைத் திறந்துபடி
யழலைத் திறந்துவெளியோ
டறையைத் திறந்துபர வொளியைத் திறந்துவீ
டாறையு மறத்திறந்து
வைப்பைத் திறந்துச்சி மலரைத் திறந்தொழுகு
மதுவைத் திறந்துகாஞு
வடிவைத் திறந்துபர வொளியைத் திறந்துநவ
வழிவிட் டழிந்துமழியாச்
செப்பைத் திறந்துசிவ ஞானமணி தந்தவா
சிறுபறை முழக்கியருளே!
செகமகிழு மனவரத பரசமய குருநாத
சிறுபறை முழக்கியருளே!! 5

88 நேசமுறு சாத்திரங் கற்றாக மங்கற்று
நிந்தனைகள் பேசியோடி
நீரிற்கு ளித்துச் செபித்துகல் லொடுசெம்பு
நேர்வைத்து மலர்தூவியும்
பூசைசெயி னும்பெற்ற பேறேது வந்துற்ற
போதமொடு ஞானமேது
பூசியா துன்னையே பூசிக்கின் ஞானவனு
பூதியுண் டுண்மைகண்டாய்

மாசிலாச் சித்தர்வித் தியாதரர்கள் காந்தருவர்
மாமுனிவர் சிவயோகியர்
வானத்த ருந்தேவர் பாரிசா தகபுட்ப
மாரிபெய் திரண்டருகினுந்
தேசுற விருந்து(துதி) செயமகிழ்ந் தருணுத
சிறுபறை முழக்கியருளே!
சிவசமயம் வளரவரு பரசமய குருநாத
சிறுபறை முழக்கியருளே!! 6

89 மங்காத ரீங்கார கிலீங்கார ஸ்ரீங்கார
மாயாத வோங்காரமாய்
மகரந கர்ந்திட்ட சிகரவக ரங்களாய்
வருமகர வுகரங்களாய்
சங்கார தாண்டவ நடித்தண்ட ரண்ட
சராசரந டித்தசலிப்பாய்த்
தாணுவாய் மூலமாய் முலப்பிர கிருதியாய்ச்
சாக்கிரா தீதனை
கங்காள ணுகியரி யாகியொளி யாகியே
கண்டுகா ணுதவனுமாய்க்
காலப்ப ரஞ்சுட ரெழுப்பிடு நிராதார
க(ாட்)சியா (யா)ட்சியோகச்
சிங்காச னத்தினி லிருந்தகுரு நாதனே
சிறுபறை முழக்கியருளே!
சிவசமயம் வள(ர)வரு பரசமய குருநாத
சிறுபறை முழக்கியருளே!! 7

90 தர்க்கமே யிடுசமய வர்க்கவா திகள்குரு
தன்னையு மனந்தன்னையுந்
தெளியாம லையையோ வெ(ாருதலை மகனை)
விழுங்கினவர் காதைபே(ால)
(ம)ர்க்கடம் பண்ணிநாய் கழுதைகழு தைப்புலி
மலைப்பாம்பு முதலையாமை
வல்லுடும் பட்டைநீர் நாய்(த)வளை (யெலி)பூசை
வண்டுபுழு வர்க்க(நா)கத்

த(ர்க்)குணங் கண்டுநெற நாட்பாத்[1] தருநரக
துங்கத்த ழுந்துமவரைச்
சுருதிநூல் போதித்து மான்மழுக் கொண்டரன்
ருேன்றினுந் தேருர்கொலோ?
சிர்ப்பரா நின்பெருமை யறிவரோ சிவரூப
சிறுபறை முழக்கியருளே!
சிவசமயம் வளரவரு பரசமய குருநாத
சிறுபறை முழக்கியருளே!! 8

சிறுபறைப் பருவம் முற்றியது.



1 கணடுநெடுநாடபாத எனல்பொருந்தும்.

# சிறுதேர்ப் பருவம்

91 கருமுகங் கொண்டுகொண் டலையாம லலைபட்ட
கலைமதி யெனத்துவண்டு
காலபா சத்திற்பிணி பட்டுமன மெல்லாங்[1]
கன்றிநின் றலைபடாமற்
குருமுக மெனப்புவன மீடேற வரனுருக்[2]
கொண்டுமுக மொன்றுகொண்டு
கோதிலாப் பரசமய கோளரி யெனப்பெயர்[3]
குறித்தனையுன் வடிவமெளிதோ
வொருமுகம் புவனாதி யண்டம்ப டைக்(கு)மற்
றொருமுக மிரட்சித்திடு
மொருமுகஞ் சங்கார மொருமுக மறைக்குமற்
றொருமுக மனுகிரகிக்குந்
திருமுகமோ ரைந்தாக வருமாதி விசுவமே!
சிறுதே ருருட்டியருளே!
தினகர னுமிலகுபத வனவரத சிங்கமே!
சிறுதே ருருட்டியருளே!! 1

92 நவகோடி கிரணம்ப டைக்குமா தவனென்ன
நகுகுண்ட லத்தினழகு
நாலாயி ரங்கோடி சந்திரோத யங்கொண்ட
நலமிகுமு கத்தினழகுந்
தவகோடி கொண்டசெந் தாமரைக் கண்ணுமொளிர்
தமனியம ணிக்கிரீடமுந்
தாளமணி முறுவலுந் துகிரழ கெழுகின்ற
சதுமறை கனிந்தவாயும்
பவகோடி யைத்தள்ளி மருவுசிக ரத்தமும்
பருவமா யழுத்துபுயமும்
பைம்பொன்முப் புரிநூலு முத்தளவி பூதியும்
பஞ்சாட்சரக் கருவினையுஞ்

1 மெலாம் என்றுளது. 2 வானுக என்றுளது. 3 யெனப
பேயர என்றுளது.

சிவகோடி ஞானப்பிர காசமுங் கொண்டவா
சிறுதே ருருட்டியருளே!
சிவசமய மிலகவரு பரசமய குருநாத
சிறுதே ருருட்டியருளே!! 2

93 பாசத்த டங்காவி லிருவினை மரத்தைத்
தெரிந்தெட்டெ ழூத்தானதோர்
பாரக்கோ டாரிகொண் டறவெட்டி வாசியாற்
பட்டமிட் டருநூலுள
நேசத்தி னுடனிட்டு நயனவீர வாள்கொண்டு
நிலையாய றுத்துநாண
நிறைகாண வுருளையைக் கூட்டியா தாரநல்
நிலமுற நிறுத்தியோங்கு
மாசற்(ற) சுழினைநடு வாணியை நிறுத்திவட
மரு(வு)தச நாடிபூட்டி
வளரிந்தி[1] ரியச்சுட ரலங்கரித் தழகான
மணியென நிறந்தெறிக்குந்
தேசுற்ற தேரேறி வந்தசிவ சிங்கமே
சிறுதே ருருட்டியருளே!
சிவசமய மிலகவரு பரசமய குருநாத
சிறுதே ருருட்டியருளே!! 3

94 பாராளு மண்டலிதர் கசதுரக ரதசிவிகை
படவிட்டு மலையேறவும்
படகேற வுந்தங்கள் திடமேற விட்(டு)றப்
பதைபதைத் துள்ளாறவெம்
போராளி தலைசயட்ட பாலகர்வெ ருக்கொளப்
பொருப்புண மரிக்கவெருவப்
புயங்கங் கலங்கக்க கலங்கியயி ராவதப்
பொருசுப்ர தீபம்வெருவ

1 வளரிநத என்றுளது.

நீராளு மவுலித் தனிக்கடவு ளம்பொன்முடி
நெடுவரையை வலம்வந்தபோர்[1]
நிகரிலாக் கொய்யுளைக் கவனவைங் கதிமா
நெருங்குவஞே மறையாழித்
தேராளி திசைமறுகி யதிசயித் துலவநீ
சிறுதே ருருட்டியருளே!
திமிரதின கரவிசய பரசமய குருநாத
சிறுதே ருருட்டியருளே!! 4

95 கரமுருட் டிப்பிரட் டிப்பேசு மார்க்கக்
கடுந்தர்க்க வாதியான
கள்ளர்வா யடைபடக் கடைபடக் கிடைபடக்
கலகநெஞ் சுடைபடப்போ
ருரமுருட் டும்பழைய முத்தலம் பாகமற்
றெருருசம்பிர தாயமான
வுண்மைக்கு ருக்(காட் டிப்பொ)ருள் காட்டி
யொட்டவொட் டாமல்வாதம்
வரமுருட் டிக்கற்ற கல்வியு முருட்டிவளர்
மனத்தையு முருட்டியாய்ந்த
வ(ற்றையு) முருட்டியுட் டெளிவையு முருட்டியிரு
மலரடியில் வீழ்ந்துபணியாச்
சிகரமுருட் டிச்செயங் கொண்டசிவ சிங்கமே
சிறுதே ருருட்டியருளே!
சிற்சமய வருளுதவு பரசமய குருநாத
சிறுதே ருருட்டியருளே!! 5

96 வானுற்ற மதியமே பலருற்ற பிரசமே
வளைவுற்ற சுழிநாடியே
மனமுற்ற நா(தமே தினமு)ற்ற விரவியே
வளியுற்ற வெளியானதே

1 = ?

நானுற்ற போதமே பாவுற்ற மோகமே
நாவுற்ற ரசபோகமே
நணியுற்ற மோகமே கனியுற்ற வூறலே
நகையுற்ற சுகசேவையே
யூனுற்ற நீதமே மாறுற்ற பாதமே
(யோ)முற்ற ஞானவொளியே
யுவவுற்ற சோதியே சிவவுற்ற வாதியே
யூடுற்ற காலபரமே
தேனுற்ற சாரமே யேமுற்ற யோகமே
சிறுதே ருருட்டியருளே!
சிற்சிமய வருளுதவு பரசமய குருநாத
சிறுதே ருருட்டியருளே!! 6

97 விஞ்சைசேர் முதியவிசு வர்மகத்[1] தொகைவாழ்க
மேகவா கனம்வாழ்கவே
விரோத யத்தனு மதுவசந் தழைக்கநறை
விரியுமல ரல்லிதழைய
வஞ்சுமுக மாகியோ ரஞ்சுதொழி லாகிநம்
மஞ்சுசா தியுமீறவே
யணிநெல்லை நகர்வாழு மகமாயி புகழ்தழைய
வரியநான் மறைவாழ்கவே!
தஞ்சமா கியவட்ட யோகந்த ழைக்கவரு
சட்சமய மீறிவளரத்
தயவுபுரி குருலிங்க சங்கமம் பெருகபஞ்
சாட்சரம் மிகுந்துவாழ்கச்
செஞ்சொல்தெரி மாந்தையம் பதிவாழ்க வந்தவா
சிறுதே ருருட்டியருளே!
சிவசிவமெய்ஞ் ஞானபர சமயகோ ளரிநாத
சிறுதே ருருட்டியருளே!! 7

---

1 வகர்மர் எனல் பொருந்தும்.

98 கண்டிதவ கண்டிதந் தேருமல் வேடமுங்
காவியு மணிந்துவீணிற்
கள்ளக் குருக்கோல முங்கொண்ட பதகர்சொற்
கரைகண்ட ஞானிபோல
வண்டமும் பிண்டமுஞ் சரியென்று குளருவ
ரருங்கதி ரொடுக்கமறியா
ரறமறஞ் சுழுத்தியு ளடங்கும்வகை யுணர்கிலா
ரம்புபெ ருத்தவகையுங்
கொண்டகலை தேய்வது மொடுங்குவது நினைகிலார்
குறைவிலாத் தன்னையறியார்
குறிக்குஞ்ச ராசரந் தன்னிட(மு தித்தொ)டுங்
குஞ்சம்பிர தாயமறியார்
தெண்டிரைக் கடல்சூழ் புவிக்குமொரு குருநாத
சிறுதே ருருட்டியருளே!
சிமயபுய சதுரபர சமயகோ ளரிராய
சிறுதே ருருட்டியருளே!! 8

99 சா(ல)ப்பிர பஞ்சதே கத்தில்விந் துற்பவத்
தலமுமத னிறமுமன் றித்
தங்குறி யாண்பெண் சனித்தவகை யும்மனத்
தன்மையும் மிதமகிதமுங்
கோலத்தி னுல்வந்த தீர்க்கமுந் திரணமுங்
கூன்குருடு பங்கவிதமுங்
கோதிலா மத்தளந் தமரகந் தண்டிவை
குறிக்கின்ற யோகபலனும்
வாலைப்பி ராயத்தி லழிவதுங் காளையாய்
வந்தபி னிறந்தவகையு
வயதுநா றுஞ்சென்றி றப்பதும் பிறப்பதுமே
மண்டல மழிந்துமழியா
சீலத்தி(ல்) யோகிகளி ருப்பதுவு மொழிகுவாய்
சிறுதே ருருட்டியருளே!
சிமயபுய சதுரபர சமயகோ ளரிராய
சிறுதே ருருட்டியருளே!! 9

100 நவயோக மெட்டெட்டு மட்டமா சித்துமிரு
நான்குகண் மத்துவகையும்
நவிலருஞ் சட்சமய முதலளவி லாச்சமய
நாட்டமும் பழமறைகளுந்
தவயோக வாசனம் பத்துங்கன் மாசனஞ்
சாற்றுமொரு நூறுவகையுஞ்
சம்பிரதா யங்களுங் கைவந்த பரசமய
சைதன்ய வொருபிரமமே
பவமோனர் போலவிழி குவித்துமிட ருப்பிமெய்
பதைப்பற்றி ருந்திடாமற்
பசுபாசப் பதியையறி வுக்கறிவு ணர்ந்திடும்
பரபோத போதமுதவுஞ்
சிவஞான சற்குருக் குருநாத சேகரா
சிறுதே ருருட்டியருளே!
சிமயபுய சதுரபர சமயகோ ளரிராய
சிறுதே ருருட்டியருளே!! 10

சிறுதேர்ப்பருவ முற்றிற்று.

**பரசமயகோளரியார் பிள்ளைத்தமிழ்**

**முற்றுப்பெற்றது.**

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

**ஆர். சத்பதி,** I. A. S.,
*மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,*
*சரசுவதி மகால் நூலகம்.*

*தஞ்சாவூர்,*
*6—12—83.*

( தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலைய அச்சகம் )